ജ്ഞാന നിക്ഷേപം

V. 2 NO. 40 10 oct 1929

1211, N28KA
N29.2.40.
189075

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 8 0

கலா நிலயம்

A Literary Weekly
வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ௵ அக்டோபர் ௴ 10௳ [No. 40.

OFFICE OF THE … 3-…19

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader). 781
2. அப்பர். (நாடக வியல்)
E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. 783
3. தமிழ்ப் பாடம் (திருவரங்கத்தந்தாதி) 786
4. வில்லிபாரத விளக்கம் (இராசசூயச் சருக்கம்)
T. S. நடராஜபிள்ளை B. A., B. L. 788
5. சாஹ்றியின், கல்விபற்றிய கருத்துக்கள் சில
K. இராஜகோபாலன் 791
6. கம்பராமாயணம் (உண்டாட்டுப் படலம்)
T. N. சேஷாசலம் B. A , B. L. 792
7. நம்மாழ்வார் விபவம்
K. இராஜகோபாலாசாரியார் B.A. B.L. 795
8. வர்த்தமானம் 799

கலா நிலயம்

சுய கல்சர்.

V

தருமத்திற் கிணங்குமாறுந் தெய்வத்தை வணங்கு
மாறும் மருமத்துள் மறைந்துநின்று மனிதரை
யியக்குகின்ற இருபெரும் இயற்கைச் சக்தி யிருப்பது
யாவர்மாட்டும் சாதமென் றுணர்ந்து தங்கள் புத்தி
யின் தூய்மையான பயிற்சியா லவைதாம் மேன்மேல்
பண்பட வளரச்செய்தல் சுயகல்ச ராகுமென்று
சென்றநாள் இங்குச் சொன்னேம்; இயம்புதற் கின்
னும் வேறோர் இயற்கையும் இருக்கக் காண்பீர்.
அதுவே, உறவுடன் உவந்து வாழும் உணர்ச்சியின்
ஊக்கமாகும்.

பெற்றதால் பிறந்ததால் மணந்ததால் நட்பினால்
ஒருவரையொருவர் தமராய்க்கொண்டு உன்னுங்கால்
உவகையும், பயிலுங்கால் மகிழ்ச்சியும் உடையவரா
கும் உணர்ச்சியொன்று மனிதர்பால் இயற்கையா
யுளது. இவ்வுணர்ச்சி யுண்டாதல்வேண்டுமென்று
கற்பித்தார் இலர். மற்று, இயற்கையாய் அமைந்தி
ராதவிடத்து முயற்சியால் அது முளைப்பது மில்லை.
தாய்முகங்கண்ட மகவும், மகவின் முகங்கண்ட
தாயும், தம்மை யறியாமலே நகுகின்றனர்: மார்புறத்
தழுவும் அன்னையைக் கழுத்துறக் கட்டிக்கொள்கின்
றது குழந்தை. வெளிப்போந்துவந்த தந்தை உடை
களைக் களையாமுன்னம் குறுநடை யாடிவந்து கால்க
ளைக் கட்டிநின்று 'எந்தாய் என்னை நின் கரங்களி
லெடுப்பாய்' எனக் கண்களால் இரக்கும் பாலகனை
ஏந்தி எடுக்கவும், அப்பாலகன், இப்புழையுள் யாதுள
தென நாசியையும், இப்புதருளுள தெதுவென மீசை
யையும் சிறுவிரல்களால் சோதிக்கும்போது இருவ
ருக்கும் எழுகின்ற இன்பத்திற்கு ஏது எதுவென்று
எவரால் இயம்புதற்கியலும். அண்ணன் தம்பி அக்
காள் தங்கை என்ற அன்பின் உணர்ச்சிக்கு உடன்
பிறந்ததல்லால் வேறோர் ஆதாரமில்லை. மனைவிக்கும்
கொழுநனுக்கும் உதிக்கின்ற மாசற்ற ஆசைக்குக்
காரணங் கூறலருமை. நெடுநாள் நண்பனிவன் வந்தா
னென நகைமுகங்காட்டி நல்வரவு கொள்ளல் எது
பற்றி நேர்கின்றது. இவ்வாறே, தனது அயல்மனை
வாழ்வோனென்றும், தனதூரானென்றும் தன்
தேயத்தான் என்றும் பரிவுடன் பாராட்டச் செய்
கின்ற உணர்ச்சி எதன்பொருட் டெழுகின்றதென
உரைக்கக்கூடும். ஆதலாற்றான், செயற்கையாய் எய்த
இயலாததும், இருப்பதற்குக் காரணகாரிய தர்க்க
முறைப்படி ஏது இதுவென்று எடுத்துக்காட்ட ஒண்
ணாததுமான இவ்வுணர்ச்சி மானுட ராயினோர்க்கெ
லாம் இயற்கை எனக் கூறுகின்றோம்.

இவ்விதம் உறவினரை உவந்துகொள்ளும் அம்சம்
முன் சொன்னவைகளைப்போல் யாவர்க்கும் ஓரளவு
இயற்கையாயிருக்கின்றதேனும், இதனையும் சுயகல்ச
ரால் தூய்மைசெய்து பெருக்குவது கடனாகின்றது.
அவ்வாறு செய்யாது இயற்கையி லது இருக்குமளவு
கையாண்டு இகந்துவிடுவோ மாயின் விலங்கின்
நிலையிலிருந்து நாம் யாதும் விலகினவ ராகமாட்
டோம். பறவைக்கும் விலங்கிற்கும் மற்றுப் பல்வகை
ஜந்துக்களுக்கும் இவ்வியற்கை இருப்பினும், சிறிது
நாள் அவை உறவாடிக் கழிவதல்லால், கருதரிய
பெரியநிலை யொன்றும் அதனால் அவைபெறுவதில்லை.

189025
N79-2-40

மக்கள் தொகுதியிலும் கோடிக்கணக்கில் எண்ணிறந்தோரு அவ்வாறே கழிகின்றனர். பேருக்கே பெற்றவரென்றும் பிள்ளைகளென்றும் மனைவியென்றும் கணவனென்றும் நண்பனென்றும் ஊரான் நாட்டா னென்றும் இருப்பதாக முடிகின்றதேயன்றி முதலில் இவரை இணைத்துவைத்த இயற்கையுணர்ச்சி இருந்தவிடந் தெரியாமல் அழிந்துவிடுகின்றது. அழிந்துபோய்ச் சிற்சில'சவுகரியங்களை'க்கருதியே தாயும் கணவனும் மகனும் சேர்ந்து ஒரு வீட்டில் வசிக்கலாகின்றனர். மிருகங்களினுடைய வாழ்க்கையமைப்பில் இவ்வித சவுகரியங்கள் வேண்டியிருப்பதில்லையாகையால் அவைகளுக்குள் உணர்ச்சி அழிவதோடு கூட்டுறவுமழிந்து தனித்தனி அவை போய்விடுகின்றன. இயற்கையுணர்ச்சியைக் கல்சர்செய்யாத மாந்தருக்கும் மாக்களுக்கும் உள்ள வேறுபாடு இவ்வளவே. மானுடராவது அரிது என்பார். மானுடர் ஆவது ஈசன் செயல். ஆயினும் மானுடராய் முற்றிலும் இருப்பது நம்முடைய செயலேயாதலால் இது அதனினும் அரிதாகின்றது போலும். மானிடராயதற்கு மகிழ்வதனினும் மானிடராயிருப்பதற்கு முயல்வதே முறை. இப்படி முயல்வதெனின் இயற்கையாயமைந்தஇவ்வுறவினுணர்ச்சியை எத்தகைய கல்சரால் பொலிவுற நிலைக்கவைத்தவ ராவோம் என்பதைச் சிறிது பார்ப்போம்.

உறவென்ற பான்மையால் நமது உள்ளத்தில் இயற்கையாய் ஊறுகின்ற ஆசையை அவ்வப்போது அநுபவிப்பதுடன் கழிந்துவிடலாகாது. சுய ஆராய்ச்சியால் அதன் இயக்கங்களைப் பன்முறை சோதித்து மெல்ல மெல்ல அதன் உண்மைத்தன்மையினையும், இவ்வாசையைப் பாராட்டுங்கால் எந்த நிலையில் நாம் அமைதி அடைகின்றோம் என்பதையும், அதன் தேய்விற்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமாயிருப்பவைகளையுந் தெளிந்துகொளல் வேண்டும். இந்தத் தெளிவு பெறப்பெற அவ்வாசை,மலரென மணமொடுமலர்ந்து தூய்மையும் அடைவதாகும். அடைந்து, கடவுளர் முடியிருந்த கொன்றையும் துளவமும்போல் நீங்கா மணமும் வாடாத் தன்மையும் பெறும். ஏனெனில், இத்தகைய ஆராய்ச்சியால், இயற்கையாயிருந்த அவ்வுணர்ச்சியை ஓர் கொள்கையாக மாற்றி அமைத்துக்கொண்டவ ராவோம். இயற்கை,கொள்கையாக மாறினால் அதுதெய்வத்தன்மைபெறுகின்றது. கொள்கையாகமாற்றிவைக்கவில்லையெனில் இயற்கைஉணர்ச்சிச் சிறிதுபோது இயங்கியபின் ஓய்ந்துவிடும். கொள்கையாயிற்றெனின் அதுவே தூய்மையாலும் அழிவின்றியும் தெய்விகநிலை அடைவது திண்ணம். இக்கருத்தினை விளக்குவதற்கு ஓர் உதாரணம் உதவலாம்.

ஆணும்பெண்ணும் காமச்சேர்க்கை விழைவது எல்லாப்பிராணிகளுக்கும் உள்ளவோர் இயற்கை உணர்ச்சி. இவ்வியற்கை உணர்ச்சி இயக்கும்போது அதனால் எய்தும் சிற்றின்பம் வேட்டுச் சேர்கின்றன. சேர்கின்ற காலத்தில் அவ்விரண்டும் ஒக்க உண்ணும் இன்பத்தால் விளைந்த பற்று அவ்வின்பம் முடிந்ததும் அற்று விடுகின்றது. மனிதர் விவாகம்செய்துகொண்டு மனைவாழ்க்கை புகுவதற்கும் ஆதியில் இந்தச் சேர்க்கைவிழைவே ஆதாரமாயிருந்தது. ஆயினும், இக்காம இயற்கையை ஆராய்ந்த நம் பண்டைக்காலப் பேரறிஞர் யாது செய்தனர்? புணர்ச்சிக் காலத்தில் பிறக்கின்ற இன்பமும் இணைக்கின்ற அன்பும் அதனோடு முடிவடைவது தகுதியன்றென வோர்ந்தனர். இவ்வியற்கையின் இயக்கத்தால் நேர்ந்த அன்பும் இன்பமும், புணர்ச்சியில்லாக் காலத்திலும் நிலைத்திருக்குமாறு செய்யவேண்டுமெனத் துணிந்தனர். அதற்காகக் குறித்த வொருவன் குறித்த வொருத்தியையே புணர்தல் வேண்டுமென்றும், அவ்வாறு புணர்தற்குரியவர் இன்னவரென்றும், இன்ன சடங்குகள் இவர் புரிதல் வேண்டும் என்றும், அவர்களுள் ஒருவருக்கொருவர் ஆற்றவேண்டிய கடமைகள் இன்னவென்றும், இவையனைய பலவிதிகளாலும் முறைகளாலும் இயற்கைப் புணர்ச்சியை 'விவாகம்' என்ற கொள்கையாக மாற்றிவிட்டனர். இப்பொழுதே, முன் இயற்கையாயிருந்தது மணம் பெறலாயிற்று. இயற்கையின் இயக்கத்தினளவுமட்டும் முன் இருந்துமறைந்த இன்பமும் அன்பும் இப்பொழுது நிரந்தரமாய் வாடாமல் சோராமல் நிலைத்திருக்கின்றன. காமஇயற்கை, 'விவாகம்' என்ற கொள்கையாக மாறியதும் தெய்வத்தன்மையும் பெற்றுவிட்டது. தெய்வமணம் என அதனை அழைக்கின்றோம், தூயமணம் எனப் பாராட்டுகின்றோம். புணர்ச்சி செய்யுமளவும் பிரிவதில்லை என்ற இயற்கைமாறி, 'ஆயுளுள்ளளவும் பிரியோம்' என்ற கொள்கை அங்கிசான்றாய் ஏற்படுகின்றது.

[காமவேட்கை, மனைவாழ்க்கைக் கொள்கையாக மாறித் தெய்வத்தன்மை அடைகின்ற உண்மைபற்றி இதனை உதாரணமாய்க் காட்டினோம். மனையாள், கொழுநன் என்ற உறவினால் உண்டாகும் உணர்ச்சியின் இயற்கை வேறு. அதுவும் அதுபோன்ற பிற உறவின் உணர்ச்சிகளும் கொள்கைகளாய் மாறித் தூய்மை யடைவதை இத்தலையங்கம் உரைத்து வருகின்றது]

இவ்வுதாரணம் இடைப்பிறவரல்—உறவெனும் இயற்கையுணர்வு, கொள்கையாக மாறச்செய்வது கல்சரின் கருமம் என்று முன்னர்க்கூறினோம். கொள்கையாக மாறுங்கால் அது உணர்வுடன் அமையாது அறிவிற்கும் எட்டியதாய், தர்மத்திற்கியைந்ததாய்த் தெய்வத்தன்மை யுடையதாய்ப் பெருகி தூயநிலையை அடையும் பல்வகை உறவுகளுக்கும் இது ஒக்குமாயினும், ஈன்றோர்க்கும் மக்களுக்கும் உள்ள உறவின் திறத்தில் இதனுண்மையைச் சிறிதிங்கு ஆழ்ந்து பார்க்கலாம்.

தாயுந் தந்தையும் தம்வயின்பிறந்த மகவின்பால் முதலில் இயற்கையான ஓர் ஆசை உடையவராயிருக்கின்றனர். பெரும்பாலும் இவ்வியற்கையுணர்வு கல்சர் செய்யப்பெறுவதில்லை. ஆதலின் பெரும்பாலும் இவ்வுறவு அவலமாய் முடிகின்றதைக்கண்டு வருந்தவேண்டியவர்களா யிருக்கின்றோம். இந்த இயற்கையின் தன்மையைப் பெற்றோர் ஆய்ந்து தெளிவதில்லை. மெய்தீண்டியும் சிறுகையால் கூழளாவியும் மழலைமிழற்றியும் இன்பம்செய்கின்ற பருவம் கடந்தபின், ஒருமனையிருந்தாலும், உண்டியும் உடையும் அளிக்கப்பெற்றாலும்,பெற்றோரும் மக்களும் பெரும்பாலும் நொதுமலாகவே நிகழ்கின்ற இரகசியம் சற்று உள்ளுறச் சிந்திப்பார்க்குப் புலப்படாது தீராது. வெளிப்படையான வெறுப்பும் பகையும் வந்துற் றுழக்கவுங் காண்கின்றோம். இது ஏனெனில், இயற்கையாயிருந்த உணர்வு வளர்ப்பாரின்றி அழிந்தபின், தங்களு

டைய சவுகரியத்திற்காகவே தாய்தந்தையர்கள் இருக்கின்றாரென எண்ணம் மக்களுக்கும், தங்களுடைய சவுகரியத்திற்கே மக்கள் இருக்கின்றாரென எண்ணம் பெற்றோருக்கும், அவர்களை யறியாமலே உட்புகுந்து குடிகொள்கின்றது. ஆதலின், இந்தச் சவுகரியத்திற்கு எவ்வெப்பொழுது விரோதம் நேர்கின்றதென்று அவர்களுக்குத் தோன்றுகின்றதோ அப்போதெல்லாம் அவர் ஒருவரையொருவர் வெறுக்காமல் என் செய்வார்! ஈன்றோர் கடமை, புத்திரர் கடமை என்று போதிக்கும் கட்டுரைகளும், புராணக் கதைகளின் எடுத்துக்காட்டும் பயனில வாகின்றன. "என் தந்தை யென்று சாவானோ, அவன் ஈட்டிய பணம் என் கை என்று வருமோ" என்று வாய்விட்டுக் கூறும் புத்திரசிகாமணிகளைச் சந்தித்தல் அருமையன்று. "எக்கேடு கெடுகின்றான், என் மகன், எவ்விடத்தேனும் சாகாமற்கிடந்தால் போதும்" என்று கூறும் தாயோ தன் மகனை இதனால் வாழ்த்துகின்றவளல்லள். இப்படி விவகரிக்கின்ற மகனுடைய பாவம் பெரிதேனும் அதனிற் பெரும்பகுதி அவன் பெற்றோரும்பகிர்ந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கின்றனர். தாங்களும் மிருகங்களாயிருந்து அவனையும் மிருகமாய் வளர்த்து வைத்ததால் வந்த சாபம் இது, இரைதேடிக் கொண்டுவந்து கொடுத்துத் தன் குஞ்சுகளை வளர்க்கும் குருவியைப் போலவும், வேட்டையாடத் தன் குட்டிக்குப்பயிற்றுவிக்கும் புலியைப்போலவும், பெரும்பாலோர் தம் மக்கள்பால் நேர்ந்த இயற்கை ஆசையால் அவர்கள் யாக்கைக்கே இரை தேடுதற்கு வேண்டிய சாதனங்களை அமைத்துத் தருவதோடு நின்று விடுகின்றனர். இப்படி யிவன் 'முன்னுக்கு' வருவதன் முடிவும் முன்கண்டவாறுவது வியப்பாமோ! அஃதின்றி, இயற்கையாய்த் தன்மகவின்பால் உண்டாய ஆசையை ஆதாரமாய் வைத்து, "நான் இவனுக்கு என்ன செய்து வைத்தால் எனது ஆசையை நிலைநிறுத்தினவனாவேன்? உலக தர்மத்தில் இவன் எந்த இடம் வகிக்கின்றான்? இவனைப் படைத்த கடவுளின் திருவுளம் யாவதாகுமோ?" என்று சிந்திப்பதற்கொத்த ஆராய்ச்சியும் கல்சரும் பெற்றோர்க்கு இருக்குமாயின், மற்றவர் பின்செலத் தன்மகன் முன்னுக்கு வரவேண்டுமென்பது உலக தர்மத்தில் எவ்விடத்திலு மில்லையென்பதும், "படிப்பும் எழுத்துமாய் அவன் கலப்பணம் சம்பாதித்து உயர்தர உத்தியோகங்கள்" செய்யவேண்டுமென்ற கருத்தேகொண்டு கடவுள் அவனைப் படைத்திரார் என்பதையும் அவர் ஒருநொடிப்பொழுதில் தெரிந்தவராவார். தெரிந்தவராயின், இயற்கையாசையில் ஈன்ற மகவைக் கொஞ்சிக் குலாவிக்கொண்டு வருங் காலத்திலேயே, பின்னாள் பலபடி முன்னேற வேண்டியதோர் வித்தாயும், தம்மைக் காப்பாற்றவேண்டிய கருவியாயும் தம் மக்களை மதிக்காமல், அவர்களைத் தெய்வத்தின் அம்சங்களாய் அழிவிலா ஆன்மாக்களாய் அறிந்து பெருமையுடன்பாராட்டி அப்பெருமைக்குரிய நிலையை அம்மக்கள் அடையுமாறு புரிதலே தாம் அவர்பால் கொண்டுள இபற்கையுறவினாசைக்கேற்ற கடமை யென்பதை உவந்து ஏற்றுக் கொள்வர். இப்பொழுதே அது கொள்கையாக மாறுகின்றது. இந்த மாறுதல் எய்தியவுடன் அவர் உறவு தூய்மையடைந்து திப்பியநிலை பெறுகின்றது. இனி அதற்கழிவில்லை. இன்பமன்றி அதனால் வேறொன்று எய்துவது மியலாது. எந்தைஈசன் நம்மை அன்புடன் ஆதரிக்கும் பான்மையிலேயே நாமும் நம்மக்களை ஆதரிப்பவராவோம். இவ்வுறவின் பெருமையும் தூய்மையும் இன்னபடியாகும். மற்றெல்லா உறவினால் வரும் உணர்வின் திறத்திலேயும் நமது நோக்கம் இவ்விதமே நிகழவேண்டும்—நிகழ்வதுமாகும்.

ஆதலின் தருமசிந்தனை, தெய்வசிந்தனை, புத்தி, என்னும் இயற்கையம்சங்களைச் சுயமாகக் கல்சர் செய்துகொள்ள வேண்டியது போலவே, இவ்வுறவினுணர்ச்சியாம் இயற்கைஅம்சத்தையும் ஆராய்ச்சியின் உதவிகொண்டு கல்சர் செய்யவேண்டியது மிகவும் அவசியமாம்.

OFFICE OF THE REGIST[...] 3 - N 1929 MADRAS

அப்பர்

7. அப்பரும் நாடக வியலும்

I. நாடகத் தமிழின் மாட்சிமை

765 பக்கத் தொடர்ச்சி

பண்டைக் காலத்தில் நாடகத் தமிழிலே, இயல் இசை என்னும் இருவகைப் பகுதியு மமையுமென்பர், நமது முன்னோர். நாடகம் இத்தன்மையதென வெடுத்துக்காட்டும் நூல்கள் பெரும்பாலும் இறந்தன. நமது வாழ்நாளே ஒரு நாடகமாதலால் அதில் ஒவ்வொரு பாகமும் அவ்வச் சீவனுக்குத் தக்கவாறு ஞானக்கூத்தாயோ, அல்லது அஞ்ஞானக் கூத்தாயோ முடியும். சொக்கநிருத்தனம் செய்யுமெம்பெருமான்தன் திருவருட்பிரசாதம்பெற்ற புனிதர்களுக்கு வாழ்நாள் ஞானக்கூத்தாயமைதல் மணிவாசகப்பெருமான் திருவாக்காற் காணலாம்:—

வான நாடரு மறியொ ணாதநீ
மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
யேனை நாடருந் தெரியொ ணாதநீ
யென்னை யின்னிதா வாண்டு கொண்டவா
ஊனை நாடக மாடு வித்தவா
உருகி நானுனைப் பருகு வித்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.

திருச்சதகம் 95.

வையகத்துடைய விச்சை நையுமாறே ஞானநாடகம் சிவபெருமான் "ஆடுவிக்"கின்றன ரென்றும், அத்தகைய கூத்தாடுவதே பக்திபெருகச் செய்யுமென்றுங் கூறுவர். இவ்வாறு அடியார் பக்திபெருக ஆண்டவன் ஆநந்தத் தாண்டவம் ஆடுவதையும் கீர்த்தித் திருவகவலிற் காணலாம்:—

நாத நாத வென்றழு தாற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்

பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவும்
எழில்பெறு மிமையத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவி னடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகு சிறுநகை
யிறைவ னீண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கைலை யுயர்கிழ வோனே.

இத்தகைய சுத்தநிருத்தயாகிய சொக்கம் நூற்றெட்டுக் கரணமுடைத் தென்பர். இச்சொக்கமே அகத்தியனார்வகுத்த சாந்திக்கூத்து, விநோதக்கூத்து என்னும் இருவகையில்,சாந்திக்கூத்தின்பாற்படும்:—

"சாந்திக் கூத்தே தலைவ னின்ப
மேந்திநின் றாடிய வீரிரு நடமவை
சொக்க மெய்யே யவிநய நாடக
மென்றிப் பாற்படூஉ மென்மனார் புலவர்"

எனவே நாடகமாகிய கதைபைத் தழுவிவரும் கூத்தும் இச் சாந்திக்கூத்தென்னும் வகுப்பிற் படும். அதனால் ஞானத்தை விளைவிக்கும் நாடகநூல் தமிழிலக்கியத்தில் மேலான நூலெனக் கொள்ளப்படும்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரம் நாடகக்காப்பிய மெனப்படும். இந்நூலில் 3-ம் காதையாகிய அரங்கேற்று காதையில் இளங்கோவடிகள் நாடகத்தமிழின் நற்சாரத்தை ஒருவாறு நமக்குக் காட்டுகின்றார். அது, மறைந்துகிடக்கும் நமது நாடகவியல் ஆராய்ச்சிக்கு இன்றியமையாததாம்.

இளங்கோவடிகள், கூத்து இருவகைத் தென்றதற்கு உரையாசிரியர்கள் பற்பலவிதமாகப் பொருள் கூறினர். ஆரியக்கூத்து தமிழ்க்கூத்து என இருவகையாகக் கொள்ளல் யுக்திக்குப் பொருந்துமெனினும், அகக்கூத்து வகைகளான தேசி மார்க்கம் என்றே பொருள்கொள்வர். இவையும் சிங்களமும், மெய்த்தொழிற் கூத்தாய், இராசதம் தாமதம் சாத்துவிகமென்னும் குணங்களால் அகத்தெழு சுவையை விளக்கும். இத் தமிழ்க் கூத்தில் பலவகைக் கூத்தும் அடங்கலாம்.

விநோதக்கூத்தாவது, சாந்திக்கூத்துபோல் பெருங்காரியங்களைச் சித்திபெறக் கருதாது, விளையாட்டுப் போக்காய் ஆடுவது. அவை, குரவை கலிநடம் குடக்கூத்து கரணம் நோக்கு தோற்பாவை வெறியாட்டு என்னும் எழுவகையென்பர். இதன் இழிவுசிறப்புக் கீழ்வரும் சூத்திரத்தாற் காண்க:—

"எழுவகைக் கூத்தும் இழிகுலத் தோரை
ஆட வகுத்தனன் அகத்தியன் றனே"

எனவே விநோதக்கூத்து மேலோர் செய்கைக்குப் பொருந்தாது. கொன்னே நாம் நம் வாழ்நாளைப் பாழாக்கல், தோற்பாவைக்குச் சமமென்பர் மணிவாசகப்பெருமான்:—

சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி யறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று வீழ்ந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா வுலக நெறியேறக்
கோலங் காட்டி யாண்டானைக்
கொடியே னென்றோ கூடுவதே.

ஆனந்தமாலை 3

ஆண்டானைக்கூடல் விநோதக்கூத்தாய்க் கூடாமையென்றும். இப்பாசுரம் பாடும்போது சிலப்பதிகாரம் கானல்வரியையும் இப்பெருந்தகை யெண்ணியிருக்கலாம் * உலகநடையே விநோதக்கூத்தென்பர் :—

நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனுமாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முன்னின்றப் பெருமறை தேடிய
வரும்பொரு ளடியேனை
யடித்த டித்துவக் காரமுன் றீற்றிய
வற்புத மறியேனே

திருவாசகம் - அற்புதப்பத்து 3.

இனித் தமிழ்க்கூத்துக்களில் உள்ள ஆடல்களிலும் பாடல்களிலும், விதிகளும் விலக்குகளும்; பாட்டு கொட்டு பாணி தூக்கு முதலியவற்றையும்ஆராயப்புகுவதன்முன்னர் நமது செந்தமிழ் நாடகமான கூத்துக்கும் தற்காலத்தில் நாடகமென்று காட்டப்படும் கூத்துக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை? நமது நாடகத்தின் ஏற்றம் என்னை? தமிழ்நாடகம் இக்காலத்தில் வழங்காதொழிந்த காரணம் யாது? என்பனவும், திருநாவுக்கரசுநாயனார் தேவாரவாயிலாய், நம்முன்னோர் நாடகவியல் எவ்வளவுதூரம் காணலாகு மென்பதும் ஆராய்வோம்.

II அரங்கு

நாடகச்சாலை நாடகமேடை யெனப் பகரப்படும் கூத்தாடும்ஸ்தலங்கள்,தற்காலத்தில் ஸ்தாவரப்பொருளாய் அரசாங்கத்தினர் சட்டவொழுங்கின்படி கட்டப்படுமன்றி, அளவு, ஒழுங்கு முதலியவற்றிற்கு யாதொரு நாடகவிதியும் பெறவில்லை. சில கூத்தாடிகள் ஊரூராய்ச் செல்லக்கருதி நாடகச்சாலைகளையும், மேடைகளையும், ஜங்கமப் பொருள்களாய்த் தங்கள் கூடாரங்களோடும் எடுத்தேகுதலையும், இக்காலத்திற் காண்கின்றோம். அவையும், எத்தகைய அமைதி பெறல் வேண்டுமென்பது போலீஸ் முதலானோர் சட்ட திட்டங்களாற் காணலாமேயன்றி, அன்னோர் நாடக விலக்கணத்திற் காணலாகாது. இக்காலத்தில் நாடகமென்பது ஒருவகை வணிகமாய், காட்சிக்கு வரும் ஏழை பணக்காரன் என்னும் பேதமின்றி யாவரிடத்தும் பணம் சேகரிக்கும் கருத்தேபெற்ற ஒரு கைத்தொழிலாக விளங்குகின்றது. ஆதலால் பணம் சம்பாதிப்பதற்குத் தக்கவாறு அரங்கு இக்காலத்தில் அமையும்.

பண்டைக்காலத்தில்,நமதுநாட்டில் கூத்தாடுவோன் அரசர்களிடத்திலும் பிரபுக்களிடத்திலும் வெகுமதி பெறுவதுவழக்கமாயினும், காண்போர் யாவரிடத்தும் பணம் பறிப்பதில்லை. அதனாலவனுக்கு அரங்கும் கோலுமே வேண்டுமன்றி, நவீன நாடகச் சின்னங்களும், சிப்பந்திகளும் வேண்டிலன். இக்கூத்தாடிகள் நாடகங்களிலும், விச்சுளிபாய்தல் முதலிய அரியதேகத்து

* சிலப்பதிகாரத்தில் மாதவி பாடிய கானல் வரியில் உள்ள ஆற்றுவரிச் செய்யுள்கள், இப்பாசுர யாப்பு அமைந்திருப்பன காண்க.

வக்கலை நிகழ்த்தலிலும் சிறந்து விளங்கினர் *. இத்தொழிற்கு ஆண்மக்களன்றிப் பெண்மக்களும் வருவதுண்டு. இத்தொழிற்கலையின் சிறப்பு, சிலப்பதிகார அரங்கேற்று கதையால் அநுமானிக்கலாம். நம் முன்னோர் அரங்கு மிகவும் கடினமின்றி, அதிகச் செலவுமின்றிச் சாதாரணமாய் எவ்விடத்திலும் அமைக்கக் கூடியதாகும். அதன் அமைதி அடியில் வருமாறு:—

கோலாலும் பலகைகளாலும் அரங்கு அமையுமெனினும், அரங்கு கட்டுவதற்குமுன் அது நிற்கும் நிலம் அதற்கு யோக்கியதை பெற்றதோவென்று அறிந்து கட்டல் வேண்டும். அரங்குசெய்யத் துவர், வரி வளை பொருத்தன் முதலிய குற்றங்களுள்ள நிலமுதவாது.

"தந்திரத் தரங்கிங் கியற்றுங் காலை
அறனழித் தியற்று வழகுடைத் தாகி
நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி
நாற்றமும் § சுவையும் மதுரமு † மாய்க்கனந்
தோற்றிய திண்மைச் சுவட துடைத்தாய்
என்புமி கூர்ங்கல் களியுவர் ஈளை
துன்ப நீறு துகளிவை யின்றி
ஊரகத் தாகி யுளைமான் பூண்ட
‡ தேரகத் தோடுந் தெருவுமுக $ நோக்கிக்
கோடல் வேண்டும் ஆடரங் கதுவே" என்பர்

சிற்பநூலார். மற்றும்,

"ஆடலும் பாடலுங் கொட்டும் பாணியும்
நாடிய வரங்கு சமைக்குங் காலைத்
தேவர் குழாமுஞ் செபித்த பள்ளியும்
புள்ளின் சேக்கையும் புற்று நீங்கிப்
போர்க்களி யானைப் புரைசா ராது
மாவின் பந்தியொடு மயங்கல் செய்யாது
செருப்புகு மிடமும் சேரியு நீங்கி
நுண்மை யுணர்ந்த திண்மைய தாகி
மதுரச் சுவை மிகூஉ மதுர நாறித்
தீரா மாட்சி நிலத்தொடு பொருந்திய
வித்திறத் தாகு மரங்கினுக் கிடமே

சுத்தானந்தப்பிரகாசம்

இவ்வாறு இடமமைத்த பிறகே அரங்கமைக்க வேண்டும். ஆயினும் சிவபெருமானுக்கோ:—

தானகங் காடரங்கா வுடையது தன்னடைந்தார்
ஊனக நாறுமுடை தலையிற்பலி கொள்வதுந்தான்!"

திருவொற்றியூர் - திருவிருத்தம் 4.

பாடும் பறண்டையு மொக்கையு மார்ப்பப் பரந்து [பல்பேய்
கூடி முழவக் குவிகவிழ் கொட்டக் குறுநரிகள்
நீடுங்குழல் செய்ய வையநெளிய நிணப்பிணக்காட்
டாடுந் திருவடி காண்க வையாற னடித்தலமே!

திருவையாறு - திருவிருத்தம் 9.

அத்தகைய அரங்கு சிவபெருமான் தேர்ந்தெடுத்தது உலக வழக்கிற்கன்று *. ஆதலால் உலகவழக்கிற் பொருந்தா வரங்கு கொண்டனர் போலும்:—

இருடரு துன்பப் படலமறைப்ப
மெய்ஞ்ஞான மென்னும்
பொருடரு கண்ணிழந் துண்பொரு
ளுடிப் புகலிழந்த
குருடருந் தம்மைப் பரவக்
கொடுநரகக் குழிநின்
றருடரு கைகொடுத் தேற்று
மையாற னடித்தலமே

திருவையாறு - திருவிருத்தம் 4.

இனி, உலகவழக்கில் அமையும் அரங்கின் இலக்கணம் ஆராய்வோம். சிலப்பதிகாரம் அரங்கேற்று கதையில் இதனிலக்கணம் இளங்கோவடிகள் சுருங்கக் கூறுகின்றார்:—

மண்ணக மொருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை யொருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபி னரங்க மளக்குங்
கோலள விருபது நால்விர லாக
வெழுகோ லகலத் தெண்கோ னீளத்
தொருகோ லுயரத் துறுப்பின தாகி
யுத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்த விடைநில நாற்கோ லாக
வேற்ற வாயி லிரண்டுடன் பொலியத்
தோற்றிய வரங்கு" ‡ என்றார்.

அதாவது, உத்தமன்கையின் பெருவிரல் இருபத்திநான்கு கொண்டது ஒரு கோலாக நறுக்கி, மேற்சொன்னவாறு அரங்கின் அகலம், நிகளம், உயரம் அமைக்கவேண்டு மென்பர். இத்தகைய அரங்கிற்குத் தூண்களமைத்து அவற்றில் குவிய விதானங்களும் தீபங்களும் அமைக்கப்படும். இவ்வாறு அமைத்த அரங்கு, இரண்டு வாயில்கள் (Entrance and Exit doors) பெற்று விளங்கும். ஆடுபவர் முதன்மையானவர் அரங்கில் ஒருவரே யாம். இவருக்கு இசைமுதலியவற்றிற்குத் துணையாய்ப் பலவகைப்

*எண்ணான் கிரட்டி யிருங்கலை பயின்ற
பண்ணியல் மடந்தையர் பயங்கெழு வீதித்
தண்ணுமை முழவந் தாழ்தரு தீங்குழல்
பண்ணுக் கிளைபயிரும் பண்ணியாழ் பாணியொடு
நாடக மடந்தைய ராடரங் கிழந்தாங்கு.

சிலப்பதிகாரம் - அழற்படுகாதை. 139- 142.

§நாற்ற மென்பது கொள்ளிலையும், செந்நெல்லும், சண்பகமும் சுரப்புன்னையு மெனவிவை. ஒழிந்தன தீமைப்பாலவென்பர்.

† உவர்ப்பிற் கலக்கமாங் கைப்பின் வருங்கேடு
துவர்ப்பிற் பயமாஞ் சுவைக—ளவற்றிற்
புளிநோய் பசிகாழ்ப்புப் பூங்கொடியே தித்திப்
பளிபெருகு மாவ தரங்கு. —பரதசேனுபதியார்.

‡ நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்த கொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங் கோயில்
காரோடு விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார் வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலும் திருவையாறே
—சம்பந்தர்.

$ இக்காலத்திலும் தெருக்கூத்தென்று கிராமங்களில் ஆடுவனவற்றைக் காண்க.

* "குடமுழை முழவ மார்க்கக் கூளிகள் பாட நாளு
நடநவி வடிகள் போலு நாகவீச் சரத்த னாரே"
திருநாகேச்சரம் - திருநேரிசை 5

‡ அரங்கேற்றுகாதை 96 - 106.

† தண்ணுமைப்புலவன், யாழ்ப்புலவன், குழலோன், நன்னூற்புலவன் இசையோன் முதலானோர் மாதவியுடன் அரங்கில் வந்ததைக் காண்க.

புலவர்களும் வரலாம். இதுவே சுந்தரமூர்த்தி நாயனாரும் பரமன் ஆடலை வகுக்கும் காலை "தக்கை, தண்ணுமை, தாளம், வீணை, தகுணி, சங்கிணி, சல்லரி கொக்கரைக் ‡ குட முழவினோ டிசைகூடிப் பாடி நின் றாடுவீர்" என்றனர். திருநாவுக்கரசு நாயனாரும்,

கொட்டு முழவரவத் தொடு கோலம் பலவணிந்து
நட்டம் பலபயின் றாடுவர் நாக மரைக்கசைத்துச்
சிட்டர் திரிபுரந் தீயெழச் செற்ற சிலையுடையா
னிட்டமுமையொடுநின்றநெய்த்தானத்திருந்தவனே

திருநெய்த்தானம் - திருவிருத்தம் 4.

என்றும்; நமது வாழ்க்கையிலக்கணம்:—

வஞ்சப் பெண்ணரங்கு கோயில்
வாளெயிற் றரவந் துஞ்சா
வஞ்சப் பெண்ணிருந்த சூழல்
வான்றவிழ் மதியந் தோயும்
வஞ்சப் பெண்வாழ்க்கை யானேன்
வாழ்வினை வாழ லுற்று
வஞ்சப் பெண்ணுறக்க மானேன்
வஞ்சனே னென்செய் கேனே.

தனித் திருநேரிசை - 5.

என்றும் எடுத்துக் காட்டினர். நமது வாழ்நாள் நாடகமும், நாம் நடிக்குங்காலை, தமிழ்நாடகமும் சாத்திர ஒழுங்காய் இடம் பொருளேவல் இவற்றிற்குத் தக்கவாறு அமையப்பெற்றுப் பதினோராடலும் பாட்டும் கொட்டும் முறைப்படி நிகழ்த்தும். தற்கால நாடகத்தின் (Dance & music) ஆடல் பாடல் நமது முன்னோர் நிகழ்த்தியவற்றிற்கு ஒப்பாகா. கடவுள்வழிபாடு செய்தலை முதலாக வெடுத்துப் பாலைப்பண் நன்கன முணர்த்தும் வரையில் அரங்கில் ஆடுகின்ற இயல்பை இளங்கோவடிகள் மொழிகளாற் காண்க:—

சீரியல் பொலிய நீரல நீங்க
வார மிரண்டும் வரிசையிற் பாடப்
பாடிய வாரத் தீற்றினின் றிசைக்கும்
கூடிய குயிலுவக் கருவிக ளெல்லாம்
குழல்வழி நின்றது யாழே யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே முழவொடு
கூடிநின் றிசைத்த தாமந் திரிகை
யாமந் திரிகையோ டந்தர மின்றிக்
கொட்டிரண் டுடையதோர் மண்டல மாகக்
காட்டிய மண்டலம் பதினொன் று போக்கி
வந்த முறைமையின் வழிமுறை வழாமல்
அந்தரக் கொட்டுட னடங்கிய பின்னர்
மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்
பாற்பட நின்ற பாலைப்பண், என்பதால்

நாடகத்திற்கு ஒருவகைப் பாயிரமாய் ஆடல் பாடல் நடத்திப் பிறகு பாலைப்பண் பாடப்படுமென்றார். இதற்குக் காரணம் என்னையோவெனின், அக்காலத்தில் நாடகச்சாலையுள் கட்டணம் கட்டி மனிதர் காணப் பிரவேசிப்பதில்லை. யாவருங்காண வீதியிலாடுவதால் கண்டோர் யாவரும் "சித்திரப் பாவையெனத் தகவடங்கிக்" கண்வாயாக "நெஞ்சுகளனாக" கண்டது விடாது உளத்து அமைவிக்க மனோலயம் ஏற்படுமாறு இத்தகைய இசையின் சாரம் நாடகத் தோரிய மக்களூட்டுவர். இவ்வாறு அவையை அடக்கித் தம் வயமாக்கிப் பின்னரே முறைப்படி யாதேனும் கதையொன்று நடித்துக் காட்டப்படும்.

‡ அடியார்க்குநல்லார் - தண்ணுமையென்பது குடமுழாவென்பர் - சுந்தரரோ இவை வெவ்வேறு வாத்தியங்களெனக் கொள்வர் - வீணைக்கும் யாழ்க்கும் பேதமுள்ளது போல தண்ணுமைக்கும் குடமுழவுக்கும் உண்டு.

தமிழ்ப் பாடம் 92.

[அஷ்ட பிரபந்தம்.]

[769வது -பக்கத் தொடர்ச்சி]

திருவரங்கத் தந்தாதி

திருவரங்கத்து மாலையிலிருந்து பதினாறு செய்யுள்கள் தேர்ந்தெடுத்துப் படித்தோம். இனித் திருவரங்கத்து அந்தாதிச் செய்யுள்கள் சில கற்கலாம்.

திருவரங்கத்தந்தாதி என்பது திருஅரங்கத்துஅந்தஆதி எனப் பிரியும். திருவரங்கத்தைப்பற்றிப் பாடிய அந்தாதி என்பது அதன் பொருள். அந்தாதி என்பது ஒருவகைப் பிரபந்தம். அந்தத்தை ஆதியாக உடையது, அதாவது முடிவை முதலாக உடையது, என்று அது பொருள்படும். ஒரு செய்யுளின் முடிவில் இருக்கின்ற சொல்லேனும், அல்லது சில எழுத்துக்களேனும் அதற்கு அடுத்த செய்யுளின் முதலாக அமையும்படி எல்லாச் செய்யுள்களும் இந்தப் பிரபந்தத்தில் தொடருமாகையால் இதற்கு அந்தாதி எனும் பெயர் வந்தது.

இந்நூலில் செய்யுள்கள் அந்தாதியாகத் தொடர்வதுமன்றி, ஒவ்வொரு செய்யுளிலும் யமகம் அல்லது மடக்கு என்னுஞ் சொல்லணி அமைந்திருக்கின்றது. முன் (2வது வால்யூம், 511, 525 வது பக்கங்கள்) திரிபு, யமகம் என்னும் சொல்லணிகளின் தன்மை கூறப்பட்டிருக்கின்றது: அதனை நினைவுசெய்து கொள்ளவும். திருவேங்கடமாலையில் ஒவ்வொரு செய்யுளிலும் பெரும்பான்மை திரிபும், சிறுபான்மை யமகமும் பின் இரண்டு அடிகளிலேயே கண்டோம். இத்திருவரங்கத்தந்தாதிச் செய்யுள்கள் எல்லாம் நாலடியும் யமகத்துடனே நடக்கின்றன. வந்த எழுத்துத்தொடரே மீண்டும்மீண்டும் வந்து வேறுவேறு பொருளைப் பொருந்த தரும்படி அமைந்துள இப்பிரபந்தத்தின் செய்யுள்களிற் சில கற்று மனப்பாடம் செய்துகொள்ளல் தமிழ்பயில்வதற்கு நல்லதோர் உதவி யாகும்.

இனிவரும் செய்யுள்கள் கட்டளைக்கலித்துறை என்னும் வகையைச்சேர்ந்தன. திருவரங்கத்துமாலைச்செய்யுள்களைப்போலவே இந்தச் செய்யுள்களும் அடி ஒவ்வொன்றும் மெய்யெழுத்துக்கள் தவிர மற்ற எழுத்துக்கள் பதினாறு அல்லது பதினேழு கொண்டிருக்கும்.

திருவரங் காவுறை மார்பா திசைமுகன்
சேவிப்பக்கந்

திருவரங் காதரித் தின்னிசை பாடத்
திருக்கண்வளர்
திருவரங் காவுன் பழவடி யேற்கருள்
செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு
செய்வதற்கே. 1

பதப்பிரிவு:—திரு அரங்கு ஆ உறை மார்பா திசைமுகன் சேவிப்ப கந்திருவர் அங்கு ஆதரித்து இன் இசை பாட திரு கண்வளர் திரு அரங்கா உன் பழ அடியேற்கு அருள் செய்ய எழுந்திரு வரம் காதலித்தேன் உனக்கே தொண்டு செய்வதற்கே.

பதவுரை.

திரு - இலக்குமி, அரங்கு ஆ - தான் வசிக்கும் இடம்ஆக, உறை-தங்கியிருக்கின்ற, மார்பா - மார்பை உடையவனே; திசைமுகன் - பிரம்மன், சேவிப்ப - சேவிக்கவும், கந்திருவர் - கந்தர்வர்கள், அங்கு - உன் அருகே, ஆதரித்து - விரும்பி, இன் - இனிய,இசை-கீதங்களை, பாட - பாடவும், திருக் கண்வளர் - அழகிய நித்திரை செய்கின்ற, திருவரங்கா - திருவரங்கநாதனே; உன் உன்னுடைய, பழ - பழமையான, அடியேற்கு - அடியேனுக்கு, அருள் செய்ய - அருள் செய்யும் பொருட்டு, எழுந்திரு - எழுந்திருப்பாயாக; உனக்கே - உனக்கே, தொண்டுசெய்ய - யான் பணிவிடைசெய்ய, வரம் - வரம்பெற, காதலித்தேன் - விரும்புகின்றேன்.

விளக்கம்:—நாலடியிலும் முதலில் 'திருவரங்கா' என்னும் எழுத்துக்கள் யமகமாக வந்திருக்கின்றன. முதலடியில் அவை, திரு அரங்கு ஆ, எனப்பிரிந்தன. ஆ, என்பது ஆக என்னுஞ் சொல்லின் க என்னும் எழுத்து கெட்டு நிற்கின்றதாகும். நளவெண்பாவின் "நாற்குணமும் நாற்படையா, ஐம்புலனும் நல்லமைச்சா" என்ற செய்யுளில் இவ்வாறு ஆக என்பது ஆ என விகாரப்படக்கூடுமென்பதை முன் (1வது வால்—130-வது பக்கம்) சொல்லியிருக்கின்றோம். உறை மார்பா என்னுந்தொடர், உறைகின்ற மார்பா என விரியுமாகையால் வினைத்தொகை.

இரண்டாவது அடியிலுள்ள திருவரங்கா என்னும் எழுத்துக்களில், திருவர் என்னும் எழுத்துக்கள்,முதலடியின் கடைசியிலுள்ள கந் என்பதோடே சேர்ந்து கந்திருவர் என்றசொல் ஆகின்றன. கந்திருவர்+அங்கு ஆதரித்து—எனப்பிரியும். ர் என்னும் மெய்யின்மேல், வருமொழி முதலிலுள்ள அ என்னும் உயிர் ஏறி ர என ஆயிற்று.

மூன்றாவதடியில் திருவரங்கா, என்னும் எழுத்துக்கள், திரு அரங்கா, என்று விளிக்கின்ற இயற்கையான பொருளைத்தரும் சொற்கள் ஆயின. திரு+அரங்கா, என்பதில், நிலைமொழி ஈற்றில் உ என்னும் உயிர் இருக்க வருமொழி முதலிலும் உயிர் வந்தால் வ் என்னும் மெய்தோன்றி, அதன்மேல் வருமொழி முதல் உயிராகிய அகரம் ஏறித் திரு வ்+அரங்கா—திருவரங்கா என்று ஆக நேர்ந்தது.

நான்காவது அடியில், திருவரங்கா என்னுமெழுத்துக்களில், திரு என்னும் எழுத்துக்கள், எழுந்திரு என்று ஆவதற்காக மூன்றாமடிக் கடைசி எழுந் என்னும் எழுத்துக்களோடு சேரும்.—எழுந்திரு வரம் காதலித்தேன். வரம் என்று, மற்ற எழுத்துக்களில் மூன்று சேர்ந்து ஒருசொல் ஆயின. கா, என்பது, காதலித்தேன் என்ற அதற்கடுத்த பதத்தின் முதலெழுத்தாய் நிற்கின்றது.

செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத்
தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன்
சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்குமங் காந்தசெவ்
வாய்முகுந்தன்
செய்ய வளைக்கும் சிலம்பணி பாதங்கள்
சேர்ந்தனமே. 2.

பதப்பிரிவு:—செய்யவளை குருவின் அருளால் திரு தாள் வணங்கி செய்ய வளை குலம் சூழ் அரங்க ஈசன் சிறிது அமுது செய்ய அளைக்கும் புவிக்கும் அங்காந்த செம் வாய் முகுந்தன் செய்ய வளைக்கும் சிலம்பு அணி பாதங்கள் சேர்ந்தனம் ஏ.

பதவுரை.

செய்யவளை - இலக்குமியை, குருவின் - ஆசாரியரது, அருளால் - கிருபையினால், திரு - அழகிய, தாள் - பாதங்களை, வணங்கி - தொழுது; செய்ய - வயல்களிலுள்ளனவான, வளை - சங்கினது, குலம் - கூட்டங்கள், சூழ் - சூழ்ந்த, அரங்க ஈசன் - அரங்கநாதனும்; சிறிது அமுது செய்ய - சிற்றுண்டியாக அருந்தும் பொருட்டு, அளைக்கும் - வெண்ணெய்க்கும், புவிக்கும் - உலகத்திற்கும், அங்காந்த - திறந்த, செம் - சிவந்த, வாய் - வாயையுடைய, முகுந்தன் - முகுந்தனுமான திருமாலின், செய்ய - செம்மையுடையதாய், வளைக்கும் - வளைந்துள்ள, சிலம்பு - சிலம்புகளை, அணி - அணிந்த, பாதங்கள் - பாதங்களை, சேர்ந்தனம் - அடைந்தோம்.

கருத்து:—ஆசாரியனது அருளால் திருமகளைத் தொழுது, அவள் மூலமாகத் திருமாலின் பாதங்களையடைந்தோம், என்பது இச்செய்யுளின் பொருள்.

விளக்கம்:— செய்யவளைக்கு, என்னும் எழுத்துக்கள் நாலடியிலுந் தொடர்ந்து யமகமாக வந்திருக்கின்றன:—

முதலடியில்—செய்யவள், என்பது முதல் பதம், செந்நிறமுடையவள், எனப் பொருள்பட்டுத் திருமகளைக் குறிக்கும் அப்பதம் இரண்டாம் வேற்றுமை அடைந்து, செய்யவளை என ஆயிற்று. அதற்குப் பின் வரும் கு என்னும் யமகவெழுத்து, குரு என ஆகின்ற சொல்லின் முதல் எழுத்து.

இரண்டாவது அடியில்—முதல்பதம் 'செய்ய' என்பது. செய், என்பது பெயர்ச்சொல்லாயின் அதற்கு வயல் என்பது பொருள். செய்அ - செய்ய, என அதனோடு அ, என்னும் விகுதி சேர்ந்து குறிப்புப்பெயரெச்சமாகி வயிலிலிருப்பதான என்று பொருள்பட்டது. அடுத்தபதம், வளை - சங்கு. பின் வந்த கு என்னு மெழுத்துக் குலம் என்று தொடர்கின்ற சொல்லிற்கு முதல் ஆயிற்று.

மூன்றாமடியில்—செய்ய, என்னும் முதல் பதம் செய்வதற்கு என்னும் பொருளுடைய வினையெச்சம். அதற்கு அடுத்த பதம், அளை. இதற்கு வெண்ணெய் என்பது அர்த்தம். அது நான்காம் வேற்றுமை பெற்று, அளைக்கு என ஆயிற்று. செய்ய+அளைக்கு, என்று சேரும்போது, வ் என்னும் மெய் வந்து செய்யவளைக்கு என [1]ஆகும்.

நான்காம் அடியில்—முதல் பதம், செய்ய. இது செம்மை என்ற பெயர்ச்சொல் அடியாகப் பிறந்த குறிப்புப் பெயரெச்சம். அடுத்தபதம், விளக்கும் என்னும் தெரிநிலைப் பெயரெச்சம்.

குறிப்பு :—முன்பாட்டின் கடைசி, செய்வதற்கே என நிற்க, இப்பாட்டு அதில் வந்துள செய் என்னும் எழுத்துக்களை முதலாகப் பெற்றுச் செய்யவளை என ஆரம்பிப்பதால், இவை அந்தாதிச் செய்யுள்கள் ஆகின்றன.

இலக்கணம்.

(1) நிலைமொழி யிறுதியில் இ ஈ ஐ என்னும் உயிர்களில் ஒன்று இருக்க, வருமொழி முதல் உயிர் எதுவானாலும் அவையிரண்டும் சேரும்பொருட்டு ய் என்னும் மெய் இடையில் வரும் என்பதைக் கூறினோம்:--

மொழி + இறுதி - மொழியிறுதி. தீ + அவிந்தது - தீ யவிந்தது. ஆசை + உண்டு - ஆசையுண்டு.

(2) நிலைமொழி யிறுதியில், அ ஆ ஊ ஒ ஓ ஔ, என்னும் உயிர்களில் ஒன்றிருக்க, வருமொழி முதல் எந்த உயிர்வந்தாலும் இடையில் வ் என்னும் மெய் அவைகளைச் சேர்ப்பதற்காக வரும் என்பதையும் சொன்னோம்:—செய்ய + இல்லை-செய்யவில்லை. சொல்லா + ஓடினான்-சொல்லாவோடினான். பூ + அலர்ந்தது-பூவலர்ந்தது. போ + என்றான் - போவென்றான், முதலியன.

III. இதுவரையில் சொல்லப்படாத எழுத்துக்கள் உ எ ஏ என்பன. உ என்னும் எழுத்திற்குச் சிறப்பாக வேறு விதி யிருத்தலால், அதனைப் பின்னர்ப் பார்ப்போம். எ என்னும் எழுத்து, தானே வினாஇடைச் சொல்லாகி நிலைமொழியாய் நிற்பதன்றி மெய்யோடு சேர்ந்து மொழிக்கிறுதியில் வராது. ஆகையால் அதனை விட்டுவிடலாம். எனவே, எஞ்சிநிற்கும் எழுத்து ஏ. இது நிலைமொழியிறுதியி லிருக்குமாயின், வருமொழிமுத லுயிரோடு புணரும்போது என்ன ஆகும் என்பதைப் பார்ப்போம்.

ஏ என்பது, வேறு சொற்களோடு சேர்ந்து, வினா தேற்றம், பிரிநிலை, எண், முதலிய பொருள்களைத் தரும்போது, (வால்யூம் 1. பக்கம் 429, 449) இடைச் சொல்லாகும்? மற்றுத் தானே, அம்புஎன்று பொருள் படும்போது, பெயர்ச்சொல்லாகும். அல்லாமலும் இது மெய்யெழுத்தோடு சேர்ந்து உயிர்மெய்யோரெழுத் தொரு மொழியாகலாம்—சே - எருது, தே - கடவுள் பே - நுரை, ஆகிய இவை, ஏ என்னும் உயிரோடு சேர்ந்த உயிர்மெய்யெழுத்துக்கள், பொருளுடைய ஓரெழுத்தொருமொழிகள் ஆகின்றன. எனின்,

i. நிலைமொழி ஏ, இடைச் சொல்லாயிருக்குமா யின், வருமொழிமுதலில் வந்த உயிர் எதுவானாலும் இடையிலே ய் என்னும் மெய் வந்து, அம்மெய்யின் மேல் வருமொழிமுதலிலுள்ள உயிர் ஏறும் :—

உதாரணம்—

அவனே + இவன் = அவனே + ய் + இவன் = அவனே யிவன். போயிற்றே + உயிர் = போயிற்றே யுயிர் மகனே + இதுகாண் = மகனே யிதுகாண்.

ii. நிலைமொழி, ஏ, அம்பு என்னும் அர்த்தமுடைய ஓரெழுத்தொருமொழியாயின், வருமொழிமுதலில் வந்த உயிர் எதுவானாலும், இடையில் வ் என்னும் மெய்வர, அம் மெய்யின் மேல் வருமொழிமுத லுயிர் ஏறும். உதாரணம்.—ஏ + ஏவினான் = ஏ வ் + ஏவினான் = ஏ வேவினான். ஏ + எங்கே = ஏவெங்கே ஏ + இறுத்தான் = ஏ விறுத்தான்.

iii. நிலைமொழி, ஏ என்னும் எழுத்தோடு சேர்ந்த உயிர்மெய் ஓரெழுத்தொருமொழி யாயின், வருமொழிமுத லுயிர் எவ்வெழுத்தாயினும் இடையில் வ்என்னும் மெய் வர, வருமொழிமுத லுயிர் அம்மெய்யின் மேல் ஏறும்.

சே + ஓட்டினான் = சே வ் + ஓட்டினான் = சே வோட்டினான். தே + உலகம் = தேவுலகம், முதலியன.

சே, என்றது எருது என்னும் பொருளில் ஓரெழுத்தொருமொழி யாகும்போது, வ் என்னும் மெய் வந்தது. ஆனால், செம்மை என்ற சொல் சில சமயம் விகாரப்பட்டுச் சே என்று நிற்பதுண்டு. அப்படி நின்ற சே, என்பதோடு வருமொழி முதல் உயிர் புணரும்போது, ய் என்னும் மெய்யேனும், வ் என்னும் மெய்யேனும் வரலாம் :—உதாரணம் —

செம்மை + அடி = சே + அடி = சே ய் + அடி = சேயடி ; அல்லது, சே வ் + அடி = சேவடி.

வில்லி பாரத விளக்கம்

சபா பருவம்.

(771 பக்கத் தொடர்ச்சி)

இராசசூயச் சருக்கம்.

மாடம் பயிலு மணித்தோ ரணவீதி
நீடுஞ் சனக்க நெருங்கித் தடுமாற
வாடம் பரக்கொண்ட லன்னானை யாபாத
சூடங் கருதித் தொழுதார் சிலமாதர்.

[மாளிகைகள் நிறைந்த அழகிய தோரணங்கள் கட்டப்பட்ட வீதியிலே, நீண்ட மையெழுதிய மாதரார் கண்கள் நெருங்கித் தடுமாற்றமடையவும், ஆடம்பரஞ்செய்து வருகின்ற நீர்கொண்ட மேகம் போன்றவனான கண்ணனைக் கால்முதல் தலைவரையில் கண்டு மனதில் இருத்தி வணங்கினார் சில மாதர்கள்.]

குடிகள் தத்தமக்குத் தோற்றியவாறு கண்டகண்ட விடங்களிலெல்லாம் மனம்போனபடி சில்லைச்சிறு குடில்களை யமைத்து, வீதியின்ஒழுங்கைக் கெடுத்து வைக்கும் முறைப்படியன்றி, மயனால் முன்னமே குறிக்கப்பட்ட ஏற்பாட்டின்படியே சரிவரச் சமைக்கப்பட்ட மாடங்களாதலால், அவை தெருவிற் பாங்கு பெற நிறைந்து நின்றன. நமது நாட்டின் வழக்கப் படி பரந்த மாடவீதியிற் சிறந்த மாளிகைகள் பல அடுக்குகளைக்கொண்டு பயின்று, அதாவது நெருங்கி இடைவிடாது பொருந்தி, அழகினைத் தந்தன. அரசர்களது வருகையைச் சிறப்பிக்க நாட்டப்பட்ட

அலர்நிறை தோரணங்கள், முற் கூறப்பட்ட தண்டார் புரளும் மாதர் தோட்களாகிய காமர் தோரணங்களோ டெழுப்பெற்றுப் பொலிந்ததவ் வீதி.

தெருவெலாந் தாமேயாகி நிறைந்த தெரிவையர் கூட்டம், தம்மை மறந்து, உடல்நெருக்குண் டலக் கண்படுவதை யவமதித்து, ஒருவருக்கொருவர் தாம் முந்தி, மற்றவர்தோளைத் தாழ்த்தித் தம் கந்தரங்களை நீட்டி முகத்தின் பக்கல் முகத்தைவைத்து நெருங்கலால் தெருவெலாம் செறிந்து தோன்றியவை, அம் மங்கைமார் முகத்திற் பொருந்திய கண்களே. காதளவோடுங் கண்களெனச் சிறப்பித்துச் சொல்லப்படுமிவைய ரஞ்சனந்தீட்டிய பெரிய நீண்ட கண்கள், அரசரையும், அஞ்சன வண்ணனையும் மாறிமாறி நோக்கியும், கண்ணனை ஏற இறங்கப் பார்த்தும், அவர் தேரூர்ந்தும் களிற்றின்மேலமர்ந்தும் விரைந்து செல்லலால், அவர் போய்விடுவதற்குமுன் அவர்களை முழுதுங் காணப் பரபரப்புக்கொண்டு நோக்கியும் தடுமாறின.

நீரைக்கொண்ட கொண்மூ, மின்னலைத் தாங்கிய மங்குல், உருமேறு பொதிந்த ஊரி, எவ்வாறு அசைந்தும் பொலிந்தும் அதிர்ந்துஞ்செல்லுமோ, அவ்வாறே வாயில்தோறும் நிறுத்தப்பட்டும் உபசரிக்கப்பட்டும், அணிந்த ஆடையாபரணங்கள் பொலியப்பெற்றும், சூழ்ந்த பேரிகையு முரசு மதிரப்பெற்றுங் கண்ணன் சென்றதா லவன் ஆடம்பரக் கொண்டலானான்.

கேசாதிபாதமென்று தலைமுதற் கால்வரையிற் கூறுவது இயல்பாயினும், கருமுகில்வண்ணன் சாமானிய மானிடப்பிறவியாகாமல், அருமறைமுதல்வனா யாழி மாயனா யிருக்குந் தன்மைதோன்ற அடிதொட்டு முடிவரை அணங்கனாராற் காண்பதற் குரியவனாயினன். அங்ஙனங் கண்டு, அவனது புண்ணிய மேனியையும், காமருவடிவினையும், பொற்புறு உறுப்புக்களையுங் கருத்திலிருத்தித் தொழுதார் சில மாதரார்.

கால முகிலுமலர்க் காயாவு மன்னதிருக்
கோல முடையோன் குலவுமணிப் பூண்மார்பின்
மாலை நறுந்துளப மன்றலுக்கு வாணயன
நீலவரி வண்டாகி நின்றார் சிலமாதர்.

[கார்காலத்து மேகமும், காயாம்பூவும் போன்ற நீல நிறத் திருவுருவமுடைய கண்ணனது விளங்குகின்ற அழகிய ஆபரணங்களைத் தரித்த மார்பில் அணிந்த துழாய் மாலையின் நல்ல வாசனைக்கு, வாள்போல் கூரிய அவர் கண்கள், கோடுகளையுடைய நீல வண்டுகளாகுமாறு நின்றார் சில மாதர்.]

கோடைக்காலத்து முகில் ஆரவாரித்துவரினும் ஒருசமயம் மழை பெய்தும், மற்றோர் சமயம் பெய்யாமலும் போவதுண்டு. கார்காலத்து மேகமோ மேன்மேலும் கருத்து நெருங்கி, இடிமுதலிய அதிகமாயின், உலகமுழுவதையுங் கவ்வி, நிலைநின்று சோனைமாரியாய்ப் பெய்தேதீரும். இறைவன் காலமுகில்போல் உலகத்தை யுய்யச்செய்யு மருள் நிறையப்பெற்றவனாய், நல்லார்க்கும் பொல்லார்க்கும் வேற்றுமையின்றி ஒப்பநின்று கருணைமழை பொழிந்து, என்று தருங்கொல் என எதிர்பாராதவனாய், மழையின்றி மாநிலத்தார்க்கில், லென்பதற்கேற்ப வவனன்றி யவனிமாந்தர்க் குய்யும்வகை வேறில்லையென விளங்குகின்றான். காயாம்பூவைப் போன்று நீலம்பூத்துக் கண்டார் கண்களுக்குக் குளிர்ச்சியைத்தந்து, தங்கள் குறைகள் நீங்கி ஈடேறுங்காலங் கிட்டியதென வவர்களுக்குறுதி பிறக்கும்வண்ணம் நிற்கின்ற தவர் திருக்கோலம்.

துளவமாலையின் மணத்தினா லீர்க்கப்பட்டு அதில் மொய்த்துத் தேனை நுகர்ந்து களிக்கும் வண்டுகளை போன்று, மாதர் கண்களும் அம்மாலையின் மன்றலாகிய வழகி லீடுபட்டு, அதன் செவ்வியை நோக்கித் தாமுமத் தாரோனுக்கோர் தாமமாய் அவனது திப்பிய தோள்களைச் சேரும் பெருமை பெற்றோமில்லையென் றுன்னி யவர் நெட்டுயிர்த்தார்.

இங்ஙனம் பலரும் போற்ற,பாண்டவ ரைவரோடும் கண்ணன் குந்திவாழ் கோயில் புக்கான். புக்கவன் ஐவரைப்பெற்றாள் பாதம்போற்ற வவளு மவனைப் பலவாறு வாழ்த்தினாள். பின்னர்த் திரௌபதியும் மற்றையோரும் பணிய வவர்பணிவுங் கொண்டு, திக்குகடோறுஞ் சென்று மீண்ட காளைகளோ டளவளாவியவர் கவர்ந்துவந்த செல்வங்களை மகிழ்வுடன் காட்டக் கண்டு மன்னவனு முவகை பூத்தான். பின்னர் வேள்விக்குச் சராசந்தன் மகனும், பூருவின் குலத்துளோர்க ளனைவரும் வந்து சேர்ந்தார்கள். அந்தணரநேகர், தூரிய முழக்கத்தினு மாரண முழக்கமிஞ்ச இந்திரப்பிரத்தத்தையடைந்து வேள்வியைச் செய்யத் தொடங்கி முதன்முதலில் யாக சாலையை யமைத்தனர்.

சுடுமனற் கலுழ னாகச் சுருதியின் படியே கோட்டி
நடுவுறத் திசைகளான்கு நான்குவெள் ளேறுகோட்டி
வடுவறச் சமைத்த சாலை மண்டபந் தன்னை நோக்கிற்
கடவுளர்க் கமைத்த யாக தலமெனக் கவினிற் றம்மா

[சுடுகின்ற அக்கினிக்கேற்ற ஓமகுண்டத்தை வேதவிதிப்படியே நடுவிலே கருடவடிவமாய்ச் செய்து, நான்கு திக்குகளிலும் நான்கு விருஷபபேஷ்டா என்கிற கைகளை வைத்து, குற்றமறச்செய்த யாகசாலையின் மண்டபத்தைப் பார்த்தால் அது, இந்திரன் முதலிய கடவுளர்க்கென்று ஏற்படுத்தப்பட்ட யாகசாலையைப்போல் விளங்கிற்று.]

அக்காலத்தில் யாகசாலை யெவ்வாறு அமைக்கப்பட்டிருந்ததென்பதை யிக்கவியா லொருவா றுணரலாம். சிறகுகளையும் வாலையும் பரப்பிக் கீழ்த்திசை நோக்கிச்செல்லும் கருடனைப்போலமைத்தல் கருடசயனமெனப்படுமாம். வ்ருஷப என்னும் மந்திரத்தைச் சொல்லி நான்கு திக்குகளிலு மமைக்கப்படுஞ் செங்கற்கள் வ்ருஷபபேஷ்டா எனப்படுமாம். இச்செய்யுளக்காலத்திய வழக்கத்தைக் காட்டற்பொருட்டெடுத்தெழுதப்பட்டதே தவிர வேறன்று.

திருந்தித் தெளிந்த உண்மையறிவினராய முற்றுந்துறந்த முனிவர் கூடிய சிறப்பால் அந்நகர் பிரமனது சத்தியஉலகம் போன்றிருந்தது ; கண்ணன் கழலிணை யடைந்துநின்ற அரசர்கூட்டத்தால் திருமாலின் வைகுண்டம் போன்றிருந்தது. அச்சமயம் பாண்டு மைந்தரை வியாதன் கூவியழைத்து "நீவிர் இதுவரைத் திரௌபதியைப் பாராளுந் தன்மை போற் பகர்ந்தெய்தினீர் ; அது மேனாள் செய்த விதியின் பயனால் விளைந்தது ; இன்றே

ஆரழற் பிறந்தமா னறத்தின் மைந்தற்குப்
பேரழல் வளர்த்திடும் பெற்றி பெற்றனள்.

அழலிற் பிறந்த அணங்கு தருமபுத்திரனுக்குப் பெருமைபெற்ற வேள்வித்தழலை வளர்க்கும் பெற்றிபெற்றாளாதலா லின்றுமுதலவளைக் குந்தியெனச் சிந்தியுங்க" ளென்றான். அழலிற்பிறந்தவணங்குஅழலைவளர்த்தலா

லினி யவள் மற்றவர்க்கழலாய்த் தீண்டற்பான்மை நீங்கினாள். பின்ன ரவர்களுக்கு வேள்விக்கோலஞ் செய்து, வேதிகையிலேற்றினார்கள். தழல்வருபாவை, ஐவர்க்கு மொருத்தியாய தன்மை நீங்கப்பெற்ற ஆரணங்கு, ஓமகுண்டத்தினி லெழுமழலை வளர்க்கும் பெருமை பெற்ற பெண்மணி, திரௌபதி, வலத்தில்வைகத் தருமனும்

‘ தழலென விருந்தா னெல்லா
வினைகளுந் தகனஞ் செய்வான்’.

தீயைப்போல் இயற்கையிற் புனிதனாயும், தன்னை யண்டினாரையெல்லாந் தன் சேர்க்கையாற் புனிதனாக்கும் பெருமைபெற்றவனாயும் விளங்கினான். ஓமகுண்டத்தில் பாபங்களைத் தகனஞ்செய்து புனிதனாய் நின்றானென்பதற்கு இடமுண்டேனும், அது யாகங்கழிந்த பின்னர் மீண்டும் பிழையிழைத்தற் குரியனாயிருக்கும் தன்மையைக் குறிக்குமாதலாலும், தருமபுத்திரன் அவ்வாறன்றி யென்றும் புரையறு பெருமையானாதலாலும் அப்பொருள் சிறந்ததன்று.

கடகரி யுரிவை போர்த்த கண்ணுதற் கடவுள்மாறி
யிடம்வல மாகப் பாகத் திறைவியோ டிருந்தவாபோ
லுடல்கலை யுறப்புத் தோலி னொளித்திடப் போர்
[த்து வேள்விக்
கடனினுக் குரிய வெல்லாங் கவினுறச் சாத்தினானே.

[மதங்கொண்ட யானையின்தோலைப்போர்த்த சிவபிரான் இடப்பாகத்திலிருந்த பார்வதியை வலப்பாகத்தில் மாறி வீற்றிருக்க வைத்ததுபோல், கலைமானினது முழுத்தோலினால் உடலை முழுவதும் மூடிப்போர்த்து, வேள்விக்குச் செய்யவேண்டிய காரியங்களை யெல்லாம் அழகாகச் செய்தான் தருமன்.]

தருமன் செந்நிறமுடையவனென்று சொல்லப்படுவதால், அவனுக்குச் சிவந்த சிவபிரானை நிறத்தினுவமை கூறுத லொக்குமேனும், மானிட னொருவனைக் கடவுளுக் கொப்பிடுதல் பொருத்தமுடையதென வெமக்குத் தோன்றவில்லை. தருமன் பிறவியால் கடவுட்டன்மையை யெய்திருப்பினும், செயலால் தேவர்களை யொத்திருப்பினும், அவர் ‘திவ்யான் திவி தேவ போகான்’ என்னும்படித் திவ்யமாய தேவபோகத்தைத் தேவலோகத்திற் றுய்க்க வருகரானவரே யொழிய, யாவற்றையும் கடந்து, மற்றவரது பாசக்கட்டை யறுக்கவல்ல கந்தழியோ டொன்றுகூட்டியெண்ணத் தரமானவரல்லர். கவி அதோடமையாமல் தன் னுவமையைப் பூர்த்திசெய்யவேண்டி யிடம் வலமாக மாறிய இறைவிக்குத் திரௌபதியையு முவமை கூறிவிட்டார். உவமைதா னிதனின் வேறுண்டோ? உமையோ உருத்திரனுடலி னுறழ்ந் ததிற்பாதியடைந்திருப்பதால், உவமையைச் சரிவர நோக்கின் திரௌபதியைத் தரும னிறுகப்பிணைத்து நிற்கும் இழுக்குத்தோன்றும். கருநிறமான ஒருவகைக் கலைமானின் கால்விரல் முதலிய வுறுப்புகள்போன்ற உரிக்கப்பட்ட தோலால் உடல் முழுவதையும் போர்த்து, கஜாசுரனது தோல்போர்த்த கண்ணுதல்போல் விளங்கினான் தருமன்.

பொங்குறு மோமச் செந்தீப்
புகையினைப் போர்த்த தென்னப்
பைங்கடல் பருகு மேகம்
பரிதியை மறைத்த தென்ன
வங்குறப் புடனே வெங்கோட்
டரிணத்தொக் கருண மேனி
யெங்கணும் புதைப்ப வேள்வித்
தொழிலிலே யிதயம் வைத்தான்.

[மேலெழும் சிவந்த சுடரோடு கூடிய ஓமாக்கினியானது புகையை மேல் போர்த்தது போலவும், பசுநிறமுள்ள கடலின் நீரை உண்ட மேகம் சூரியனை மறைத்தது போலவும், கால் வாய் முதலிய உறுப்புக்கள் தோன்றவும், கொடிய கொம்பு தோன்றவும், உரித்தெடுக்கப்பட்ட மானின் தோலானது சிவந்த உடல் முழுவதையும் மூடி மறைக்க யாகத்தொழிலில் தன் மனத்தைச் செலுத்தினான்.]

ஓமத்தீயின்மேற் புகை கவிந்து நிற்பதுபோல், செந்நிற மேனியானைக் கருநிறக் கலைத்தோல் மூடி நின்றது.

நெய்யி னாகுதியை யுண்ணவுண்ணத் தீச்சுடர்க் கொழுந்துவிட் டெரிவதுபோல, உவகையாகுதி யுட்கொள்ளக்கொள்ள உள்ளம் பொங்கி நின்றது. நீர் கொண்டமேகம் செந்நிறச்சூரியனை மறைப்பதுபோல், கருநிறக் கலைத்தோல் செந்நிறத் தருமனைச் சேர்ந்தது.

வேள்வித் தொழிலிலேயே யிதயம் வைத்தவனாய், வேறொன்றின்மேலும் கருத்தைச் செலுத்தாது தருமன் நெய்யைச்சொரிந் தேழுநாட்க ளோமஞ்செய்தான். யாகமுடிவில் சுவாகைமுதல்வனான வக்கினியை மும்முறை வலம்வந்து அரசருக்குத் தரவேண்டிய பரிசுகளையெல்லாம் தம்பிய ரீட்டிவந்த பொருள்களைக்கொண்டு கொடுத்து, யாகமுடிவிற் செய்யும் ‘ அவபிருத ’ புனலாடிய பின்னர், மயக்கமற்ற நிறைந்த ஞானமுடைய மாயனை வணங்கிப் பின்,

பரிதியு மதியும் வன்னியு முதலாம்
பல்வகைக் குலத்து முற்பவித்த
நரபதி குழாத்தில் யாவரே பெறுவார்
நவிலுமுற் பூசை மற்றென்ன

சூரிய குலத்தரசரும், சந்திர குலத்தரசரும், வன்னிகுலத்தரசரும் கூடிய குழுவில் யாவர் முதல்பூசையாகிய அக்கிரபூசைக் குரியவரென்று வீடுமனைத்தொழுதுவினவினன். வீடுமன் வியாசனைநோக்க வப் பெரியானும், காரின்மா மேனிக் கரியசெங் திகிரிக் கண்ணனுக் குதவெனக் கதித்தான்.

அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:— முருகக் கடவுளை முழுமுதற்பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல், பென்ஷன் டாக்டர் V. S. அருணைசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா.

வி. பி. சார்ஜ் வேறு. கலாநிலயம், வேப்பேரி, சென்னை.

சாஹ்தியின்

கல்விபற்றிய கருத்துகள் சில.

Sa-di's Impressions on Education

18975

[இவருடைய சரித்திரம் 282வது பக்கத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது]

1

ஓரூரில் பிரபு ஒருவன் இருந்தான். அவனுக்கிருந்த ஒருபிள்ளை முழுமுட்டாள். அப்பிரபு தன் பிள்ளையின் நிலைக்கு வருந்தி அறிஞன் ஒருவனிடம் அவனை அழைத்துச்சென்று “ஐய, இச்சிறுவன் முட்டாளாயிருக்கின்றான். இவனுக்குக் கல்விபோதித்து அறிவுண்டாம்படி செய்வீர்” என வேண்டிப் பிள்ளையை ஒப்புவித்தான். அவ்வாறே அவ்வறிஞனும் மிகமுயன்றான். முயன்ற முயற்சியெலாம் வீணாக, அவ்வறிவுடையோன், ‘உமது பையனுக்குக் கல்வி வருவதாகத் தெரியவில்லை. என்னையும் அனேகமாக முட்டாளாக்கி விட்டான்,’ என்று தந்தையினிடந் தெரிவித்தான். இயற்கையாய் மனத்தினிடம் அறிவின் ஆர்வமுள்ள தன்மை யிருந்தால்தான் கல்விப்பயிற்சி பயன்படும். எவ்வளவு சிறந்த கொல்லனாலும் மிகமிகத் துருவேறிக் கெட்ட இரும்பைச் சுத்தம்செய்து வெண்மையாக்க வியலாது. நாயொன்றை எவ்வளவு முறை குளிப்பாட்டினாலும் பயனில்லை. அது குப்பை மேட்டைத்தான் நாடும்.

2

சிறந்த தத்துவ அறிஞன் ஒருவன் தன் மக்களைப் பார்த்துச் சொல்வான்:—

என் மக்களே! கல்விகற்று அறிவுப்பேற்றைப்பெறுவீர்களாக. மற்ற வீடுவாசலாதி உடைமைகளும், தங்கமும் வெள்ளியும் சமயத்தில் துணைபுரிய மாட்டா. இருக்குமிடம் பெயர்ந்து வெளிச்செல்லும்காலத்தில் பொன்னும் வெள்ளியும் பயனற்றனவாகும். பொன்னையும், வெள்ளியையும் கொள்ளையிடத்திருடனுண்டு, உடையவனும் சிறிதுசிறிதாகச் செலவு செய்துவிடலாம். அறிவு நிதியோ வற்றாத ஊற்று. அதைக் கொள்ளையிட வியலாது. அது செலவழிந்தும் போகாது. கற்றவன், தன் கைப்பொருளை இழந்த காலத்தும் வருந்த வேண்டியதில்லை. அவன் பெற்ற கல்விநலம் செல்வம்தரும் சுரங்கமாகும். ஒரு தொழிலைத் தேடிக்கொண்டு கௌரவமாய்ச் சம்பாதிக்கலாம். கற்றவனுக்குச் சென்ற விடமெலாம் சிறப்புண்டு. எங்கும் யாவரும் அவனைவிரும்பி ஏற்பர். கல்லாதவனைத் தொடர்வது வறுமையும் சிறுமையுமே. ஐய, நீங்கள் பிதிரார்ஜிதமாகச் செல்வம் பெற வேண்டுவீரெனின் உங்கள் தந்தையினதான அறிவு நிதியைப்பெற்றுச் சுகமே வாழுங்கள். நான்வைத்துப் போகும் செல்வமோ அழியும் தன்மையது, பத்து தினங்களில் விரயம் செய்யப்படலாம். செல்வமாதி செல்வாக்குடன் வாழ்ந்தவனால் கீழ்ப்படிந்து நடக்கவும் மெய்வருந்தி ஒரு கருமத்தைச் செய்யவும் முடியுமோ!

சிரியாதேசத்தில் ஒருசமயம் கலகம் ஒன்று நடந்தது. அக்குழப்பத்தில் எல்லோரும்சொத்துச்சுதந்திரம் வீடுவாசல் எல்லாவற்றையும் இழந்தனர். குழப்பநிலை மாறியதும், கல்விப் பயிற்சியுள சாதாரண ஜனங்கள் மந்திரிகளாகவும், அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும் அமர்ந்தனர். பிரபுக்களும் தனவந்தரும் ஆய பெரியமனிதர்களின் பிள்ளைகள் அறிவுப்பயற்சியிலாத காரணத்தால் கையில் ஓடேந்தி ஊர்ஊராய், கிராமம் கிராமமாய் இரந்துகிடக்க நேர்ந்தனர்.

[இறைவனுடன் மனிதனைச் சந்துபடச் சேர்த்துவைப்பதே கல்வியாலாய பயனென்று சலிக்காது வகுத்துவரும் கலாநிலயத்தைப் படிப்போர்க்குச் சாஹ்தி சொல்லிவைக்கும் கல்விநெறி சிறிது வியப்பைத்தராலாமெனினும், சிறிது சிந்திப்பின் இவ்வாசகத்தில் வியப்பதற் கொன்றுமில்லை என்பது புலனாகும். கல்வியின்பால் ஆர்வம் மிகக்கொண்டன்னார், சுயநோக்கத்தோடேனும் சிலர் கற்கப்புகுவரேல் அவர் அறிவு மெல்லமெல்ல வளர்ச்சியுறச் சுயநலமும் பரநலமாய் மாறிவிடும், மாந்தரும் உய்ந்திடுவர், என்றே அவ்வாறு இயம்பியுளார் போலும்]

3

ஓர் அரசகுமாரனது கல்விப்பயிற்சியைக் கவனித்துவந்த ஓரறிவாளி இரக்கமிலாது அவனைத் திட்டுவதும் தண்டிப்பதுமா யிருந்தான். குமரனும் ஆசிரியனது கொடுமையைச் சகிக்கமுடியாது, தனது தந்தையினிடம் சென்று, தான் படும்பாட்டைக் கூறித் தன் தேகத்தில் புண்ணையும் காட்டினான். அரசன் சினங்கொண்டு, அப் போதகரை அழைத்துவரச் செய்து, ‘எனது பிரஜைகளில் மிகத்தாழ்ந்த நிலையுடைய எவனிடமும் காட்டாத கடுமை என் புதல்வன்மாட்டுக் காட்டியுள்ளீர். உமது கருத்தென்ன,’ எனக்கேட்டான். அதற்கு வித்தகன் விடையிறுத்தான்:

‘மன்ன, பேசுமுன் சிந்திப்பதும், செய்யுமுன் கருமத்தை ஆய்வதும், மனிதவர்க்கத்தின் கடமையாகும். எனின், அக்கடமையின்பால் மன்னர்கள் எவ்வளவு கருத்துடையவராய் இருக்கவேண்டுமென்பது வெளிப்படை. அரசர் சொல்லும் செய்லும் ஜனங்களின் கவனத்திற்குரியவை. சாதாரண மனிதன் சொல்லையும் செயலையும் யாரும் கவனிக்கப் போவதில்லை. எளியவன் ஒருவன் தவறுகள்பல செய்யட்டும், நூற்றில் ஒருவர்கூட அதைக் கவனியார். அரசன் ஒரு தப்பான வார்த்தை சொல்லிவிட்டால் அது நாடுநாடாய்த் தேசந்தேசமாய்ப் பரவிவிடும். ஆகவே அரசகுமாரர் வளருங்கால் அவர்கள் சரியான வழியில் செல்லும்படி அதிகமான கவலை எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும். இளமையில் நல்ல பழக்கம் பெறுதவர்களிடமிருந்து அதிர்ஷ்டதேவதை அகன்றுவிடுவாள். இளஞ்செடியை நீ விரும்புமாறு வளைத்து விடலாம். அதுவே உலர்ந்துவிடின் அதை நேராகச்செய்ய இயலுமோ? இளங்கிளையை வளைத்துவிடலாம், அது முற்றியபிறகு நிமிர்த்தமுயல்வதெல்லாம் வீண்வேலையே யாகும்..’

இன்னவாறுரைத்த வித்தகர் மொழிகேட்டு மகிழ்ந்தனனாய் அரசன், அவருக்குப் பல வெகுமதி யளித்தனன்.

4

பேரறிஞர் ஒருவர், தனது சீடனொருவனிடம், கூறிய மொழிகளை நான் (சாஹ்தி) கேட்கலாயி

னேன். 'ஆதாமின் மக்கள் (கிறிஸ்திய மதநூலின்படி மாந்தரின் முதற் தந்தை ஆதாம் ஆவர்) வாழ்க்கைக்குரிய வஸ்துக்களின்பால் காட்டும் ஊக்கத்தினளவு, கடவுள்பால் நாட்டத்தைச் செலுத்துவரேல், ஸ்வர்க்கத்தில் தேவர்களைக் காட்டிலும் (Angels) சிறந்ததான ஸ்தானத்தைப் பெறுவார்கள்.' இப்பேருரையைக் கூறிவைத்தார் அப்பெரியார் நீ தாய் வயிற்றில் பிண்டமாய் இருந்தபோது உனக்கு வேண்டியவைகளைத் தந்து உன்னைக்காவாது கடவுள் இருக்கவில்லை. உனக்கு உருவமும் ஆன்மாவையும் தந்துள்ளார். புத்தியும், அறிவும், ஆயும்தன்மையும், பேசும் வன்மையும், எல்லாம் அளித்துள்ளார் அவர். கருணையால் இரு கைகளையும், பத்து விரல்களையும் தந்துள்ளார். இவ்வண்ணம் வேண்டுவன அனைத்தும் தந்தவர், ஒன்றிற்கும் உதவாத மடயனே, நீ வர்ழ்வதற்கு வேண்டிய உணவு தந்துதவ மறந்துவிடுவார் என்பதா உன் எண்ணம்!

5

ஒரு தனவந்தன் வீட்டுவழியாய்ச் சென்றுகொண்டிருந்த சன்னியாசிஒருவன், காலும் கையும் கட்டப்பட்டு ஹிம்ஸிக்கப்படும் அடிமை ஒருவனைக் கண்டனன். கண்டவன், இதனை நோக்கிநின்ற தனவந்தனைப்பார்த்து 'என் மகனே, கேள்! உன்னைப்போன்ற ஒரு மனிதனை உனது அடிமைபாகச்செய்து, அவன் மீது உனக்கு அதிகாரத்தையும் கொடுத்துள்ளார் கடவுள், அதற்காகக் கடவுளை நீ போற்றுவாய். உனது அடிமையை நீ இவ்வளவு கொடுமையாய் நடத்தாதே. தீர்ப்புத்தினத்தன்று கடவுள் முன்னிலையில், நீசெய்த கொடுமையால் உன்னிலும் அவன் சிறந்தவனாகலாம். உன்னிடம் அடிமையாய் இருப்பவனிடம் அவ்வளவு சினங்கொள்ளாதே. அவன் உடலை வருத்தாதே. அவன் உள்ளம் நோகுமாறு செய்யாதே. நீ பணம் கொடுத்து அடிமையை வாங்கலாம். அவனைப்போல் ஒருவனை உன்னால் சிருஷ்டிக்க முடியுமா? உனது அதிகாரமும், கர்வமும், எவ்வளவுதூரம் செல்லுமென்று கருதுகின்றாய்? உன்னிலும் சிறந்த வலிமை பெற்ற எஜமானன் ஒருவர் இருக்கின்றார். அடிமையின் எஜமானனாய் நீ யிருக்கலாம். ஆனால் உனக்கும் எஜமானனாவார் ஒருவர் இருக்கின்றார் என்பதை மறந்துவிடாதே. தீர்ப்புத்தினத்தன்று அடிமை ஸ்வர்க்கம் பெறுவதும், எஜமானன் நரகம் செல்வதும் உண்டு. இத்தகைய நிகழ்ச்சி ஏற்படுமேல் அது அவமானத்திற்குரியது. ஆகவே, உனது அடிமைகளினிடம் கருணையோடிரு. உனது கோபத்தையெல்லாம் அவன்மீது செலுத்தவேண்டா.

6

சில சிரியா வாசிகளோடு ஒருமுறை யாத்திரை செய்ய எனக்கு நேர்ந்தது. நாங்கள் போகும் வழியில் திருடர்களதிகம். எங்களுக்கு வழித்துணையாகவந்த சிறுவன் ஒரு மதயானையளவு வலிமை பெற்றவன், வாட்போர் செய்யும் ஆற்றலும் பெற்றவன். அவன் கையிலிருந்த வில்லை எங்களில் பத்துப்பேர் ஒன்று சேர்ந்து வளைக்கமுடியவில்லை. சிறந்த மல்யுத்தக்காரன் எவனும்அவனுடன் போர்செய்து வெற்றிபெற இயலாது. ஆனால் செல்வத்தில் வாழ்ந்த அவன் உலக அனுபவம் பெற்றதில்லை. போரில் ஒலிக்கும்முரசொலி அவன் செவிக் கெட்டியதில்லை. தீ கக்கும் ஆயுதச் சுழற்சியையும் அவன் பார்த்ததில்லை. ஆகவே போரில் வெற்றிகொண்டதுமில்லை, தோல்வியுற்றுக் கைதியானதுமில்லை. அத்தகை இளையவன் துணையுடன் நாங்கள் யாத்திரைசெய்தோம். வழியில் வந்துறும் விபத்துக்களை விலக்கிடுவான் என்று நான் எண்ணினேன்.

இவ்வண்ணம் வழிநடக்கையில் இரண்டு திருடர்கள் ஆயுதபாணிகளாய்ப் புதர் ஒன்றிலிருந்து வெளிப்புறப்பட்டனர். துணையாய்வரும் சிறுவனைப்பார்த்து 'அப்பா, ஏன் நிற்கின்றாய், உனது ஆற்றலை அவர்களிடம் காட்டி அவர்களைத் துரத்துவாய்' என்றேன். துணைவனது வாள் கைகழன்று தரையில் விழுந்தது. உடலமெல்லாம் அச்சத்தால் நடுக்கிற்று. நூலிழையையும் பகழியொன்றால் இரண்டாய் பிளக்கச்செய்யும் ஆற்றலுடைய சிறுவன் இத்திருடர்முன் செயலற்றுப் போனான்.

எனவே எங்களது பொருள்களையெல்லாம் திருடர்களிடம் கொடுத்துவிட்டு உயிர்தப்புவதைத் தவிர வேறு கதியில்லை. ஆதலால், பலமுள்ள சிறுவனைக்காட்டிலும் கல்வியும் உலகஅனுபவமு முள்ளவனே சிக்கலான சந்தர்ப்பத்தில் உதவக் கூடியவன்.

கம்ப ராமாயணம்

பாலகாண்டம்

17. உண்டாட்டுப் படலம்.

[774 வது பக்கத் தொடர்ச்சி]

நெஞ்சத்தின் வஞ்சத்தால் நேர்ந்ததோர் நிலைமை.

மாந்திய மதுவினுள் தம் உணர்வெலாம் முழுக மாதர், வழுவிய மதியராகித் தம்மையே தேடப் புகுஞ் செவ்வியராய்ப் பின் தாம் தாமேயாகு முண்மை சிறிது தெளியுங்கால் தம்பால் கொழுநர் வரவை நயக்கலாயினர். ஆயவர் சிற்சிலர் செய்த செய்கையைக் கம்பர் அழகுறக் கூறிக் காட்டுவர். காதல் தூதுபோக்கப் பாங்கியர் கைக்கெட்டி என்றும் நிற்பராதலால்

கனைகழற் காமனாற் கலக்க முற்றதை
அனகனுக் கறிவியென் றறியப் போக்குமோர்
இனமணிக் கலையினா டோழி நீயுமென்
மனமெனத் தாழ்தியோ வருதி யோவென்றாள்.

["ஒலிக்கின்ற சிலம்பு அணிந்த மன்மதனால் நான் கலங்கியிருப்பதைக் குற்றமற்ற என் கணவனுக்கு நீபோய்த் தெரிவி" என்று அவன் அறியும்படி தன் தோழியை அனுப்புங்கால், இரத்தினங்கள் பதித்த மேகலையணிந்த ஒருத்தி, அவளைப்பார்த்து, "தோழி, நீபோய் விரைவின் அழைத்து வருவாயோ, அல்லது அவன்பால் சென்ற என்மனம் அங்கேயே தயங்குவதுபோல், நீயும் பிரிந்துவர இசையாமல் காலதாமதம் செய்வாயோ?" என்றனள்]

தன் நெஞ்சினைப் பலகால் நாயகன்பால் தூது போக்கி அது எளிதில் மீளாமை தெரிந்துள இம்மடவரல், இனி அதனை விடுத்தல் அறிவன்று எனத் தேர்ந்து தோழியை அறிவுறுத்தி அனுப்பினாள். அனகன்பால் தூது உய்த்தவள் செய்தி இது. அரங்கனது அழகில் ஆழ்ந்த வேட்கையால் அவனை அடையுமாறு நைந்துருகிய ஒரு தலைவியின் செயலை இதற்கு எதிர்நிலையாய் எடுத்துக் காட்டுகின்றார் அழகிய மணவாளதாசர். அவள், தோழியர் முதலாய தூதுக்குரியோரை அரங்கன்பால் அனுப்புதல் துணிவாகாதென மதித்துத் தன் நெஞ்சையே அனுப்பிப் பேதையிற் பெரியளாயதை,

நீரிருக்க மடமங்கைமீர்
    கிளிகடாமிருக்க மதுகரமெலா
நிறைந்திருக்க மடவன்னமுன்ன
    நிரையாயிருக்க வுரையாமல்யான்
ஆரிருக்கினுமென் னெஞ்சமல்லதொரு
    வஞ்சமற்றதுணை யில்லையென்
றுதரத்தினொடு தூதுவிட்டபிழை
    யாரிடத்துரை செய்தாறுவேன்
சீரிருக்குமறை முடிவுதேடரிய
    திருவரங்கரை வணங்கியே
திருத்துழாய்தரின் விரும்பியேகொடு
    திரும்பியே வருதலின்றியே
வாரிருக்குமுலை மலர்மடந்தையுறை
    மார்பிலே பெரியதோளிலே
மயங்கியின்புற முயங்கியென்னையு
    மறந்து தன்னையு மறந்ததே

[இளமைபொருந்திய என் தோழிமார்களே, நீங்கள் இருக்கவும், கிளிகள் இருக்கவும், வண்டுகள் எல்லாம் நிறைந்து இருக்கவும், இள அன்னங்கள் வரிசையாய் இருக்கவும், உங்களொருவரோடும் சொல்லாமல் யான், யார் இருந்தபோதிலும், என் நெஞ்சம் அல்லாது எனக்கு வஞ்சனையற்ற துணை வேறு இல்லையென்று இரகசியமாக அதனைத் தூதுவிட்டேன். அதுவோ பெரும்பிழையாய் முடிந்தது. அந்த வெட்கக்கேட்டை நான் இப்பொழுது யாரிடத்தில் சொல்லி ஆறுவேன். நான் நம்பி யனுப்பிய என் நெஞ்சு என்ன சதி எனக்குச் செய்ததெனில்—சிறப்புடைய வேதங்களால் தேடமுடியாத திருவரங்கரைக்கண்டு வணங்கி என் காதலைச் சொல்லி, அவர் அக்காதலை யேற்று விருப்புடன் அடையாளமாகத் திருத்துழாய் தருவாராயின் அதனைப் பெற்றுக்கொண்டு வா என்று சொல்லி நான் என் நெஞ்சை அனுப்பியிருக்க, அதுவோ திரும்பிவராமல், கச்சுக்கட்டிய முலைகளையுடைய மலர்மடந்தையாகிய திருமகள் தங்கியுள அவர் மார்பிலும் பெரிய தோளிலும் மயங்கி இன்பமுறத் தழுவிக்கொண்டு, தூதனுப்பிய என்னை மறந்ததுமல்லாமல் தூதாகப்போந்த தன்னையுமே மறந்துவிட்டது.]

என்று நவில்வோர் நாவு முள்ளமும் கனியக்கனிய இரங்கித் தன் கழிவிரக்கம்பட மொழிகின்றனள்.

"என்பொருட்டுத்தூதுபோய தோழியர் தம்பொருட்டே அவ்வனகன்பால் தாழ்வரோ" வென இவ்வரிவைய ரெய்துமையம் முற்றிலும் ஆதாரமற்றதன்று போலும். ஏனெனில், சென்றதோழியர் சென்றவாறே கழிகின்றனரல்லால் காதலனைத் தம் தலைவிக்கு அழைத்துவந்தவரிலர். ஆதலால்,

மானமர் நோக்கியோர் மதுகை வேந்தன்பால்
ஆனதன் பாங்கிய ராயி னாரெலாம்
போனவர் போனவர்த் தொடரப் போக்கினாள்
தானுமங் கவர்கள்பின் தமிய ளேகினாள்.

[மானைப்பழிக்கும் பார்வையுடையவள் ஒருத்தி, ஒப்பற்ற வலிமையுடைய தன்கணவனிடத்தில், தன் பாங்கியர்களாய் இருந்தவர்களை யெல்லாம், ஒருத்திபின் ஒருத்தியாய்த் தொடர்ந்து அனுப்பிப் பின் தானுமே தனியாக அங்குப் போவானாயினள்]

இவ்வாறு போக்கிய தூதின்பின் தானும் போவ தன்முன் இடைநின்ற காலத்திற் சிலர் இருந்ததன்மையையும் இவ் வியங்குசித்திரத்து ளினிது காணலாம்.

விரைசெய்பூஞ் சேக்கையின் றெப்ப மீமிசை
கரைசெயா வாசையங் கடலு ளாளொரு
பிரசமென் குதலையாள் கொழுநன் பேரெலாம்
உரைசெயுங் கிள்ளையை யுவந்து புல்லினாள்.

[கரையில்லாத காதலாகிய கடலுள், வாசனை வீசுகின்ற மலர்ப்படுக்கையாகிய தெப்பத்தின்மீது நாயகன் வரவு நோக்கி இருந்த தேன்போன்ற மொழியுடைய ஒருத்தி, தன் நாயகனுடைய பேர்களை யெல்லாம் சொல்லுவதாகிய கிளியை மனமகிழ்ந்து தழுவினாள்]

நாமமெத்தனை இந்நாயகற் கென்னிலோ! பெற்றோர் இட்டபேர் ஒன்றேயாயினும், கலவிக்களியின் மயக்கத்திலும் புலவித்துனியின் பேதைமையிலும் இந்நங்கை, "அன்பே, அமிர்தே, உயிரே, கண்ணே, மணியே," என்றும், "கள்வா, வஞ்ச, கன்மனமுடையோய், கொடியோய்" என்றும் அழைத்த பேர்கள் எண்ணில வாவதால், அவையெலாம் அருகிருந்து கற்றுள கிள்ளை விளம்பலாயிற்று. வேறொருத்தி,

மன்றுணு றொருசிறை யிருந்தொர் வாணுதல்
தன்றுணைக் கிள்ளையைத் திழீஇயென் னுவியை
இன்றுபோய்க் கொணர்கிலை யென்செய் தாயெனக்
கன்றிலோ டொத்தியென் றழுது சீறினாள்.

[வாள்போன்ற நெற்றியை உடையவள், வாசனை வீசுமோர் இடத்தில் இருந்து, தனக்குத் துணையாய கிளியைத் தழுவி, "என் ஆவிபோன்ற நாயகனை நீபோய் அழைத்துவரவில்லை. மற்று நீ இருந்து எனக்கு என்னபயன். துன்பமே செய்வதில் நீ எனக்கு அன்றிலையே போல்கின்றாய்" என்று அழுது கோபங்கொண்டாள்]

வேறோரிடத்தில்,

தோடவிழ் கூந்தலா ளொருத்தி தோன்றலோ
டூடுகெ னோவுயி ருருகு நோய்கெடக்
கூடுகெ னோவவன் குணங்கள் வீணையிற்
பாடுகெ னோவெனப் பலவும் பன்னினாள்.

[மலர்கள் அலர்ந்த கூந்தலையுடைய வொருத்தி, "என் நாயகன் வந்தால், அவனோடு நான் ஊடல் கொள்ளலாமோ, உயிர் உருகும்படிசெய்யும் காமநோய்தீரக் கூடலாமோ, அல்லது அவனது குணங்களையெல்லாம் வீணையிற்பாடிப் புகழலாமோ" என்று பற்பல தனக்குளே சொல்லிக்கொள்வா ளாயினள்]

மற்றோர் சிறை,

மறப்பிலள் கொழுநனை வரவு நோக்குவாள்
பிறப்பினொ டிறப்பெனப் பெயருஞ் சிந்தையால்
துறப்பரு முகிலிடைத் தோன்று மின்னெனப்
புறப்படும் புகுமொரு பூத்த கொம்பனாள்.

[மலர்ந்த பூங்கிளைபோல்வா ளொருத்தி, தன் நாயகனை ஒரு போதும் மறவாதவளாகி, அவன்வரவை எதிர்பார்த்துப் பார்த்துப் பிறப்பும் இறப்பும்போல் மாறிமாறிவரும் தன் எண்ணங்களால், முகிலிடை நீங்காது தோன்றும்

மின்னலெனத் தன் படமாடத்திற்கு வெளியேவந்து வழி நோக்குவதும் உள்சென்று இருப்பதும் ஆயினள்]

அயலோரிடத்தில்,

குழைத்தபூங் கொம்பனை ளொருத்தி கூடலை
இழைத்தன ளதுவவ ளிட்ட போதெலாம்
பிழைத்தலு மனங்கவேள் பிழைப்பி லம்பினால்
உழைத்தன ளுயிர்த்தன ளுயிருண் டில்லென.

[தளிர்த்த பூங்கிளைபோன்ற ஒருத்தி, நாயகனை இன்று கூடநேருமோ நேராதோ வென்று தரையில் தன் விரலால் கோடுகிழித்து, தலைப்புக்கூடினால் தான் நாயகனைக் கூட நேருமென்றும், கூடாதாயின் தானும்கூடவதில்லையென்றும் ஓர் கொள்கையின்படி குறிபார்த்தாள். அவ்வாறு அவள் கிழித்தபோதெல்லாம், அது கூடாமல் பிழைத்துப்போனதால், குறிதவறாத மன்மதனது அம்பினால் மிகவருந்தி உயிர் இனி உண்டோ இல்லையோ என்னும்படி பெருமூச்சு விட்டாள்]

இவ்வாறு கூடல் காட்டிய குறி பொய்க்காது என்னும் உண்மைக்கிணங்க, தூதுசென்ற தோழி நாயகனை அழைத்துவராமல் தனியாக வருவாளைக் கண்டவோர் தலைவியின் மனநிலையைக் கம்பர்,

துனிவரு நலத்தொடு சோர்கின் றாளொரு
குனிவரு நுதலிக்குக் கொழுந னின்றியே
தனிவரு தோழியுந் தாயை யொத்தனள்
இனிவரு தென்றலு மிரவு மென்னவே.

[இன்னுந் தன் நாயகன் வந்திலன் என்ற கோபத்தால் ஊடி, அவ்வூடல் நிலையில் அமைந்த அழகோடு சோர்பவள் ஆன ஒரு வளைந்த நெற்றியை உடையவளுக்கு, நாயகன் இல்லாமல் தனியாக வந்த தோழியும், களவொழுக்கங் கடிந்து தன்னைக் காவலிற்குள்படுத்தும் தயைப்போலவே தோன்றினள். இனிவரும் தென்றலும் இரவும் என்னவாகுமோ]

எனச் செவ்வனம் செப்புகின்றார். தூது அனுப்பியவர் செய்தி இன்னபடியாக, தம்முடைய காமத்தைத் தோழியரிடத்துந் தெரியச் சொல்வதற்கு நாணினராய்ச் சில மடைந்தையர் பெரிதுங் கலங்கினர்:—

ஊறுபே ரன்பினா ளொருத்தி தன்னுயிர்
மாறிலாக் காதலன் செலவை மற்றொரு
நாறுபூங் கோதைபா னவில நாணுவாள்
வேறுவே றுளசில மொழிவி ளம்பினாள்.

[சுரக்கின்ற மிகுந்த காதல் உடைய ஒருத்தி, தன் உயிர் வேறு இல்லாத நாயகன்பால் 'தூதுசெல் என்று,' வேறொரு வாசனை வீசுகின்ற பூமாலை யணிந்தவளிடம் சொல்ல நாணினவளாய், துணிந்து சொல்ல வாயெடுக்குந்தோறும் வேறுசில வார்த்தைகளைச் சொல்லி முடிப்பவளாயினள்]

ஆர்த்தியு முற்றது மறிஞர்க் கற்றந்தான்
வார்த்தையி னுணர்த்துதல் வறிதன் றோவென
வேர்த்தனள் வெதும்பினள் மெலிந்து சோர்ந்தனள்
பார்த்தன ளொருத்திதன் பாங்க னாளையே.

["என்னுடைய துன்பமும், அது உண்டான காரணமும் அதனால் வரும் சோர்வையும், வார்த்தையால் அறிவுடையோருக்குச் சொல்வது வீணன்றோ" என எண்ணி (தன் நாயகனை அழைத்து வா என்று தோழியினிடம் சொல்லாமலே) ஒருத்தி, வேர்த்தாள் வெதும்பினாள், மெலிந்து சோர்ந்தாள், தன் பாங்கியை, 'என்நிலை உணரவில்லையோ நீ' என்பாள்போல் இரந்து நோக்கினாள்]

இவ்விதம் நாணத்தால் சொல்லமாட்டாதாரும், சொல்லி யனுப்பியுந் தோழிமார் திரும்புதலின்றித் தாழ்வதற்குத் தரியாதாரும்,

பயிருறு கிங்கிணி பரந்த மேகலை
வயிரவான் பூணெலாம் வாங்கி நீக்கினாள்
உயிருறு தலைவன்பாற் போக வுன்னினாள்
செயிருறு திங்களைத் தீய நோக்கினாள்.

[தன் உயிரனைய நாயகன்பால் தானே போய்ச்சேர நினைத்தவளாகி, தான் போவதை மற்றவருக்குக் கூறியழைப்பதுபோல் ஒலிக்கின்ற சலங்கையையும், பரந்த மேகலையையும், வயிரமிழைத்த சிறந்த ஆபரணங்களையும் கழற்றி நீக்கினாள். ஆனால், தான் போவதை நிலவொளியால் காட்டிக் கொடுக்கும் குற்றமுள்ள சந்திரனைக் கோபித்து நோக்கினாள்.]

எத்துணைக் காதல் இம் மங்கையர்க்குத் தத்தம் நாயகர்பால் இருந்ததென்பதை,

கொலையுரு வமைந்தெனக் கொடிய நாட்டத்தோர்
கலையுரு வல்குலாள் கணவற் புல்குவாள்
சிலையுரு வழிதரச் செறிந்த மார்பிற்றன்
முலையுரு வினவென முதுகை நோக்கினாள்.

[கொலைத் தொழிலே ஓர் உருவம் பெற்றது போன்ற கொடிய கண்களையும், கலையை உருவிப் பூரிக்கின்ற அல்குலையும் உடைய ஒருத்தி, தன் கணவனை இறுக அணைத்து, மலையும் உருவழியும்படி திண்ணியதாகவுள்ள அவன் மார்பில் தன் முலைகள் ஊடுருவிச் சென்றனவோ வென்று அவனது முதுகைப் பார்த்தாள்]

என வவர் முயங்கு மொய்ம்பினால் ஊகிக்கலாம். எனினும் சிலமாதர், இவ்வளவு ஆர்வத்தையுந் தம் மகத்துளடக்கிப் பள்ளியின்கண் ஊடவு மூடினர். ஊடலோ நேரம்நெடிது நில்லாதுநீங்கப் பின் கூடற்கழைக்குங் குறிப்புகள் மிக்க இரசமானவை:—

துனியுறு புலவியைக் காதற் சூழ்சுடர்
பனியெனத் துடைத்தலும் பதைக்குஞ் சிந்தையாள்
புனைகுழ லொருமயில் பொய்யு றங்குவாள்
கனவெனு நலத்தினாற் கணவற் புல்லினாள்.

[காதலாகிய சூழ்ந்தகிரணங்களையுடைய சூரியன் உள்ளத்தில் உதிக்க, அது கோபமுற்ற ஊடலைப் பனியென அகற்றிவிடவும், பதறுகின்ற மனத்தையுடைய வொரு அலங்கரித்த கூந்தலுடைய மயில்போன்றவள், பொய்யாகச் செய்யும் தன் நித்திரையில் கனவு கண்டாளெனப் பாவித்து அதன் உதவியால் கணவனை அணைத்துக் கொண்டாள்].

வேறொருத்தி,

உய்த்தபூம் பள்ளியி னூட னீங்குவாள்
சித்தமுண் டொருத்திக் கதன்பன் தேர்கிலன்
பொய்த்ததோர் மூரியா னிமிர்ந்து போக்குவாள்
எத்தனை யிறந்தன கடிகை யீண்டென்றாள்.

[அமைக்கப்பட்ட மலர்ப்படுக்கையில் அமர்ந்திருந்த ஒருத்திக்குத் தான் ஊடல் நீங்கவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனை அவன்கணவன் தெரிந்துகொள்ளவில்லை. ஆதலால் தானின்னும் தூங்கவில்லையென்பதும், உரையாடற்கு ஏற்றவளாயிருக்கின்றாளென்பதையும் அவனுக்குத் தெரிவிக்கும் சூழ்ச்சியோடு, அரைத்தூக்கத்தில் சோம்பல் முரிப்பவளைப்போல் பாவனைசெய்து, 'இப்பொழுது எத்தனைநாழிகை சென்றன' என்று கேட்டாள்]

உரையாடப்புகற் கொன்றும் வாய்க்கெட்டாவிடின் "மணி என்ன?" என்று இக்காலம் சிலர் துவக்குவது தொல்லைநாட் சூழ்ச்சியென்றே இதனால் தோன்றுகின்றது. பொய்யுறக்கக் கனவெனும் நலத்தினாலும் பொய்த்ததோர் மூரியாலும் அவள் உணர்த்தும்வரையில் ஊடற்பத முணராது கையற்றுக்கிடக்கின்ற இக்கணவரிலொருவன், குறிப்பல்லாததை ஊடற்குறியோவென வீணாற்கஞ்சி நடுங்கவே கற்றுளான். எவ்வாறெனின்,

பொய்த்தலை மருங்குலா ளொருத்தி புல்லிய
கைத்தல நீக்கினள் கருத்தி னீக்கிலள்
சித்திரம் போன்றவச் செயலொர் தோன்றற்குச்
சத்திர மார்பிடைத் தைத்த தொத்ததே.

[இல்லாதிருந்தும் இருப்பதாகப் பொய்யைச் சொல்லிக் கொண்டு அலைகின்ற இடுப்பை உடைய ஒருத்தி, மனதில் பிரியவேண்டுமென்ற எண்ணம் இல்லாமலே தன் கணவனைப் புல்லியிருந்த கைகளை நெகிழ்த்தினள். சிந்தையின்றிச் சித்திரம்போன்ற இச்செயலை 'ஊடினள் இவள்' என்ற நாயகன் எண்ணித் தன் மார்பில் ஓர் பாணம் தைத்ததுபோல் பதைத்தான்]

இங்ஙனம் பற்பலவிதங்களில் அங்கா ளம்மாதரார் பருகியதேறல் காமத்தைக்கனற்றிவைக்க இரவு தேய்ந்து, மறுபகல் கதிரோன் குணதிசைக் கடலிற் றோன்றினன்.

நம்மாழ்வார் விபவம்.

தென்னாட்டில் திருநெல்வேலி ஜில்லாவில் ஆழ்வார் திருநகரி என்று ஒரு மஹாக்ஷேத்ர மிருப்பதாக இதைப் படிக்கும் எல்லாரு மறிந்திருக்கலாம். இது பொருநை என்று தமிழ்நாட்டில் பெயர்பெற்றுள்ள தாம்பரபர்ணி என்னும் நதியின் கரையில் வாய்ந்துள்ளது. இந்தவூரில் வேளாளர்மரபில் காரிஎன்ற ஒருவருக்கு அவர் வழிபடும் தெய்வமாகிய மஹாவிஷ்ணுவின் கருணையால் ஒருஆண்குழவி பிறந்ததும் அதற்கு அவ்வூரில் கோவில்கொண்டிருக்கும் ஆதிபிரான் ஸந்நிதியில் 'மாறன்' என்று திருநாமம் சாத்தி வளர்த்துவந்தார். இக்குழந்தை சிறிதும் மானிட சிசுவுக்குள்ள நகை ரோதனம் பசி துன்பம் இவைகளால் பீடிக்கப்படாமல் வளர்ந்து வந்ததைப்பார்த்து இஃதென்ன அற்புதம் என்று விஸ்மயித்து வ்யஸநித்துத் தமக்கு உரித்தாயிருந்தும் உலகவாழ்க்கைக்குப் பயனிலை என்று, மேற்செப்பிய ஆதிபிரான் ஸந்நிதியில் தாய் தந்தையர்கள் இக்குழவியை விட்டுவிட்டுப் போந்தார்கள். இச்சிசு பல வருஷங்கள்வரையில் அக்ஷேத்ரத்தில் அருகிருந்த ஒரு புளியமரத்தடியில் ஒதுங்கி வர்த்தித்தது. இளமைப்பருவமும் அவ்விடத்திலேயே நடைபெற்றதாயினும் உலக மரியாதைக்கேற்ப உறங்குதல் பக்ஷித்தல் இல்லாமல் காலம் நடந்தது. இவர் பதினாறுவது பிராயத்தில் மதுரகவிகள் என்ற ஒரு பூர்வசிகைப் பிராம்மணோத்தமர் உசாவ, அவரிடம் பேசத்தொடங்கி அவருக்குத் தத்வஹித போதனைகளைச்செய்ய ஆரம்பித்தார். இவ்விதம் செய்யவே அவரும் அங்குள்ளாரும் அவருக்கு, மனிதர்களை ஜனிக்கும்பொழுதே புகுந்து கப்பிக்கொண்டு ஜடரத்தில்ப்ரவேசித்து அஞ்ஞானத்தைப் போதித்து மருளு மிருளுமாக ஆக்கவல்ல சடம் என்ற வாயுவை நிரோதித்து அதனால் குறைபடாத இம்மஹானுக்குத் தகுதியான திருநாமம் அமைக்கவேண்டுமென்று மதுரகவியும் மற்றுள்ளாரும் சடகோபன் என்று பெயரிட்டு ப்ரசுரப்படுத்தினார்கள். சடகோபன் என்பதகுச் சடன்என்ற வாயுவைக் கோபித்தவர் என்று பொருள்.

இவருக்கே பின்னொருகால் ஸ்ரீரங்கத்தில் இவருடைய திருவாய்மொழியாகிய திவ்யப்ரபந்தத்தின் பாசுரங்களைச் சாத்தித் திருச்செவியருளிக் கேட்ட ஜகதீச்வரி ரங்கநாயகி அம்பாள், இவருக்குத் திருமகளாகிய தன்னிடத்திலும் ஜகதீச்வரரான அரங்கநாதப் பெருமானிடத்திலும் உள்ள ஈடுபாட்டை யுன்னி அர்ச்சகமுகேன நம், அதாவது தம்மிடத்தும் பெருமானிடத்தும் உள்ள ஆழ்ந்த பக்தியைக் குறித்து நம்மாழ்வார் என்று திருநாமம் சாற்றுவித்தார். இது கொண்டே இவ்வைஷ்ணவ மார்க்கதர்சியை நம்மாழ்வார் என்றே அவர் கிரந்தங்களைப்பற்றியும் அவருடைய ப்ரஸம்ஸையைப்பற்றியும் உலகத்தில் குறிப்பிடுகிறார்கள்.

வைணவ குருபரம்பரையில் இவர் உலகமளிக்கவே அவதரித்த கிருஷ்ணபிரான் காலத்துக்கு ஸமகாலமாயிருந்தவர் என்பதுகொள்கை. கண்ணபிரான் இவ்வுலகத்தைவிட்டு விண்ணாடு சென்றது கலியுகத்தின் துவக்கத்தில் கலிபிறந்து 43நாள் சென்றபின், நம்மாழ்வார் முப்பத்தைந்து பிராயம் வரையில் உலகத்தில் வீற்றிருந்து பிறகு அந்தமில் பேரின்பத்திலமைந்த அமரர் குழாத்தோடு அமர்ந்திருக்க வைகுண்டத்திற் ஏகினர் என்பதும் பரம்பரை. இவர்காலத்தைப் பற்றி நவீனர்கள் ஆராய்ச்சி என்று பெயரிட்டு நடைபெறும் தர்க்கங்களாலும் குதர்க்கங்களாலும் பலவிதமாய் வெவ்வேறு காலங்களில் ஜீவித்திருந்தார் என்று எடுத்துரைக்கிறார்கள். இதைப்பற்றி மற்றொருசமயம் விசாரிப்போம்.

இவர் அவதாரஸூசகமாயும், இவருடைய மஹாத்ம்யத்தைப்பற்றியும் புராணங்களில் த்யோதகமான குறிப்புக்கள் உண்டோ என்று விமர்சம் செய்ததில் இவைகளைப்பற்றி ஸ்ரீமத்பாகவதம் நாலாவது ஸ்கந்தத்தில் புரஞ்சனோபாக்யானத்தில் ஒருவாறு த்யோதகமான குறிப்பை இங்கு எழுதல் உரித்தாகிறது.

முதற் புரஞ்சன உபாக்யானம், புரஞ்சனன் என்ற மஹாராஜன் ஒன்பது வாசலுள்ள ஒரு கோட்டையிலிருந்து தன்னுடைய ஸௌக்யத்திற்கும் மஹிமைக்கும் ஏற்ப வெகுகாலம் ஸுகமாய் வாழ்ந்திருந்தான் என்றும், காலன் என்ற ஒரு விரோதி அவன் வாழ்வைச் சிதைக்க எத்தனித்து ஒவ்வொரு வாசலாக ஆக்ரமித்ததால் அவன் துரத்தப்பட்டான் என்றும், பிறகு அவன் சிலசில பிறப்புக்களில் இதேமாதிரியாக அரசனாக அநேக கோட்டைகளில் ராஜ்யபாரம் வகித்து மீண்டு அவஸாநத்தில் ஒருபெண்ணாக விதர்ப்பனென்னும் வைதிககுலத்தில் பிறந்தானென்றும், பின் பாண்டியதேசத்து ஓரரசன் வீரசுல்கமாய் அவளைக் கவர்ந்து மணந்தான் என்றும் உபாக்யானம். இவ்வண்ணம் வாழ்க்கை அமைந்த ஆதிபுரஞ்சனன் சிலகாலத்திற்குப்பின் தன்னுடைய பர்த்தாவாகிய சிற்றரசன் யோகீச்வரராகத் தன் ஆச்ரமத்தை மாற்றிக்

கொள்ள இவளும் அம்மஹா யோகியைத் தொடர்ந்து பரிசரணை செய்த புண்ணியத்தால் அவிஜ்ஞாதன் என்று ஆவிர்பவித்த பகவானால் தன் புருஷன் ஏறிய விண்ணுடு சேர்ப்பிக்கப்பட்டாள் என்றும் காதை.

இதன் உட்பொருள், புரஞ்ஜனன் என்ற ஜீவாத்மா ஞான கர்மேந்திரியங்களோடு அமைக்கப்பட்ட அழகாகிய தேஹமாகிய கோட்டைக்குள் வஸித்து மரித்துப் பிறகும் ஜன்மித்து மரித்துக் கடைசியில் புண்யவசத்தால் ஆசார்யமுகேன ஞானோபதேசம் பெற்றுப் பரகதி அடைகிறது என்கிறது. இதில் தாம்ரபர்ணிதீரத்து யோகீச்வரர் என்ற குறிப்பாலும், அவர் புரஞ்சனனுக்கு ஞானோபதேசம் செய்தார் என்ற குறிப்பாலும், வீரசுல்கத்தால் ஜீவாத்மாவைப் பெற்று அதை உஜ்ஜீவிப்பித்தார் என்ற அடையாளத்தாலும் மேற்கண்ட உபாக்யானத்தில் கூறப்பட்ட சிற்றாசரும் யோகீச்வரரும் நம்மாழ்வார் என்றே ஊஹிக்க இடமுண்டு.

இவ்வவஸரத்தில் வேதியர் மரபில் பிறவாத நம்மாழ்வார் எங்ஙனம் லோகாசாரியராக வைணவர்கள் கொண்டாட இடம் கொடுத்தது என்றும் இவ்விடத்தில் விசாரிக்க ஸங்கதமாகும். முன் இவரை குருவாக ஆச்ரயித்த மதுரகவிகள் இவரைப்பற்றிப் பாடிய செய்யுள்களால் அக்காலத்திலேயே தெய்வக்கிருபையும் அஸாதாரண யோகமஹிமையும் வாய்ந்து இவர் அக்காலத்திலுள்ள ஒரு புலவர் பாடியதுபோல் "நாமம் பராங்குசமோ நாரணமோ" என்று விஸ்மயிக்கும்படி தெய்வத்தன்மையை எல்லாரும் உணர விளங்கிவந்தார் என்பதில் ஐயமில்லை. மதுரகவிகள்

"நன்மை யால்மிக்க நான்மறை யாளர்கள்
புன்மை யாகக் கருதுவ ராதலின்
அன்னை யாயத்த னென்னை ஆண்டிடும்
தன்மை யான்சட கோபன்என் நம்பியே"

என்றும், தாம் நம்மாழ்வார் ஒருவரையே "தேவுமற்றறியேன் குருகூர்நம்பி" என்றும், தமக்கு வாய்ந்த புருஷார்த்தம் "ஒண்தமிழ்ச் சடகோபன் அருள்" என்றும், அதை "எண்திசையும் அறிய இயம்புகேன்" என்றும் "மிக்கவேதியர் வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி என்நெஞ்சுள் நிறுத்தினான்" என்றும், அம்மஹானுடைய மதத்தைத் தாம் பிரசுரிப்பதில் "குருகூர்நம்பி பாவின் இன்னிசைப் பாடித் திரிவனே" என்று உத்யுக்தராயிருப்பதாகவும்,

அருள் கொண்டாடும் அடியவர் இன்புற
அருளினான் அவ்வரு மறையின் பொருள்
அருள்கொண் டாயிரம் இன்தமிழ் பாடினான்
அருள்கண் டீர்இவ் வுலகினில் மிக்கதே

என்றுந் திருவாய்மொழியின் லோகஹிதத்தைக் கருதிப்பாடி இருக்கிறார்.

இவ்வாழ்வார் ஒரு நித்யஸூரியும் வைகுண்டத்தில் ஸேநேசமுதலியாருமான விஷ்வக்ஸேநர் அவதாரம் என்பது வைஷ்ணவர்களுக்குள் பெரும்பான்மையோர் அபிப்ராயம். சிலர், வேறு சில வைகுந்தநாட்டுத்தொண்டர்களுள் இருவருடைய அவதாரம் இவரென்று குறிக்கிறார்கள். இது பொருந்தாது. ஒரு விக்ரஹ விசேஷத்தில் இரண்டு மூன்று பெயர்களின் அனுப்ரவேசம் சாஸ்திரத்துக்கு ஒவ்வாதது. இது இப்படி இருக்க, இவ்வாழ்வாரைத் திருவாய்மொழியின் உரைகளுள் பெரிதும் விவரமுமாகிய 'ஈடு' என்று பெயர் பெற்ற முப்பத்தாறாயிரப்படி என்னும் வ்யாக்யானத்தில் உபோத்காதத்திலேயே இவரைப்பற்றிச் சாற்றும்பொழுது ஆழ்வார் நித்யஸம்ஸாரி என்று பிராது இட்டிருக்கிறார்கள். நித்யஸம்ஸாரி என்றால் எப்பொழுதும் ஸம்ஸாரம் என்று சொல்லப்படுகிற பிறப்பு இறப்போடுகூடிய பல ஜன்மங்களில் இந்த உலகத்தில் பிறந்து உழலுபவனாகும். இவன் எக்காலத்திலும் பாபவிமோசனம் பெற்று நல்லகதியாகிற மோக்ஷத்தை அடைய உரித்தானவனல்லன் என்று ஆகிறது. இந்த ஜீவாத்மா எக்காலத்திலும் 'ஊனில் மேய ஆவியாய்'' வைணவர்களின் கொள்கைப்படி மோக்ஷம் என்கிற "மேல்கண்டு வீடில்லாக் காதலின் பத்திற்கும்", "மேலால் பிறப்பின்மைபெற்று அடிக்கீழ் குற்றேவல் செய்யும்" என்றும் பெரியதிருவந்தாதியில் ஆழ்வார் அருளியதுபோல் பகவத் கைங்கர்யத்திற்கு அனர்ஹராய்த்தீரும். மேற்கண்ட உரைகாரர் ஏன் இவ்வாழ்வாருக்கு மோக்ஷமில்லவே இல்லை என்று அறுதியிட்டார் என்பது இவ்விடம் விசாரிக்கத்தக்கது. எக்காலத்தும் ஆழ்வாரின் ப்ரபந்தரூபமான தமிழ்வேதம் சிறப்பாய் நடைபெற வேண்டுமென்ற ஆவல் தூண்ட, அதன் நிமித்தமாக ஆழ்வார் எப்போதும் நம்மோடுகூட உள்ளார்; அவர் நம்மை உஜ்ஜீவிப்பதற்கு இன்றியமையாத் துணைவர்; என்ற கருத்துடன் நித்ய ஸம்ஸாரி என்கிற பதத்தின் அர்த்த தத்துவத்தை மறந்தார்போலும். அன்றேல், இந்த நித்யஸம்ஸாரி என்கிறபதம் நித்யஸூரி என்கிற பதத்திற்குப் பதிலாக முதலில் இவ்வுரையைப் பட்டோலை சாத்தியவன் எழுத்துப்பிழையாக, அறியாமையால் அந்தப்பரம்பரையாய்ப் பின்னுள்ளார் தொடர்ந்திருக்கவேண்டும்.

ஆயினும் ஈட்டிலுள்ளது ஸித்தாந்தமே என்று பாவிக்க ஏதாவது கமகமுண்டா என்று ஆராய்ச்சி செய்வோம். ஆங்காங்கு ஆழ்வார் திவ்ய ப்ரபந்தங்களில் சில கமகங்களால் இவ்வுரைகாரர் ஒருவாறு மயங்கி இருக்கக்கூடும். பெரிய திருவந்தாதி 53-வது பாசுரத்தில்

"ஒன்றுண்டு செங்கண்மால்! யானுரைப்ப துன்னடிக்கென்செய்வனென்றே இருத்தி நீ—நின்புகழில் [யார்க்
வைகுந்தம் சிந்தையிலும் மற்றினிதோ ? நீஅவர்க்கு
வைகுந்த மென்றருளும் வான்.'' என்பர்

ஆழ்வார் இங்கிருந்து அவன் புகழில் நிகழும் காதலாகிய இன்பமே தனக்குப் போதுமென்று உரைத்தாராதலின், அவர் ஸம்ஸரிக்க இசைந்தவர் என்று நினைத்திருக்கக்கூடும். ஆனால் இவர் அதே ப்ரபந்தத்தில் 79, 80வது பாசுரங்களில் "ஊழ்வினையை அஞ்சுமே" என்றும் "பிறப்பிறப்பு மூப்புப் பிணி" இவைகளால் அவனை மறக்கக்கூடுமென்றும், "அவ்வாறு மறப்பெல்லாம் ஏதமே" என்றும், "மண்ணளந்தான் பாதமே ஏத்தாப் பகல்" வீண் என்றும் செப்பியிருக்கிறார். பின்னும் திருவாய் மொழி இரண்டாம்பத்தில் ஒன்பதாவது திருவாய்மொழியில் "எம்மா வீட்டுத் திறமும் செப்பம்" அதாவது எவ்வளவு மஹிமை பெற்றிருந்தாலும் வைகுண்டஸ்தான விசேஷத்தில் தனக்கு விசேஷ ஆதரவில்லை என்றும் ஆழ்வார் செப்பியிருப்பதால் அவர் தாம் ஸம்ஸரிக்க இசைந்தார் என்று மேல்கண்ட ஈடு அனுமானித்திருக்கவுங்கூடும்.

ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி, செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்தநூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்
விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பில் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

பருந்தும் நிழலும்.

A. பாலகிருஷ்ணன் M. A. B. L. இயற்றியது.

டிக்வன்ஸி, எமர்ஸன், லாண்டார், ரஸ்கின் போன்ற பல ஆங்கில ஆசிரியர்களின் பிரபலமான கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடங்கிய நூல். அவ்வக் கட்டுரைகளுக்குத் தோற்றுவாய் விளக்கம் முதலியனவும் அருமையாய் எழுதியிருக்கின்றார்.

விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

மானேஜர், கலா நிலயம்.

11. வேளாளர் தெரு, புரசை, சென்னை.

நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பனி, லிமிடெட்.

(ஹெட் ஆபீஸ்:—கல்கத்தா)

இந்திய இன்ஷுயரன்ஸ் ஆபீஸ்களில் மிகவும் முன்னேறிவரும் ஆபீஸ் இதுவொன்று.

குறைந்த பிரீமியமும், மற்றவகைகளிலுள்ள பலவித சவுகரியங்களும் இக்கம்பனியை எல்லாரும் விரும்புவதற்குக் காரணமாயிருக்கின்றன.

வேறெங்கேயாகிலும் நீங்கள் இன்ஷுர் செய்து கொள்ளத் தீர்மானிப்பதன்முன் தயவுசெய்து, எங்கள் ரேட்டுக்களையும் எம்மிடத்தில் இன்ஷுர் செய்வதால் வரக்கூடிய நன்மைகளையும் லாபங்களையும் ஒத்திட்டுப் பாருங்கள்.

பிராஸ்பெக்டஸ் ஏஜன்ஸி முதலியவைகளுக்கு:—

கெ. எஸ். கோபாலய்யா, கிளைக்காரியதரிசி

மதராஸ் பிரான்ச், லோன் ஸ்கோயர்,

பிராட்வே, சென்னை.

குலசேகராழ்வார்

திருவாய் மலர்ந்தருளிய

பெருமாள் திருமொழி

மூலமும்

பு. ப. இரத்தினசபாபதி நாயகர், அவர்கள் இயற்றிய பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்பு, சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்த விரித்தியுரையும்.

நாலாயிரப் பிரபந்தத்தின்கண் தேர்ந்த பயிற்சி இருப்போர்க்கும் அதனைப் பயில முயல்வோர்க்கும் ஆகிய இருதிறத்தோர்க்கும் இப்பதிப்பு மிகுந்த பயனும் உதவியும் அளிக்க வல்லது.

விலை, காலிகோ கட்டடம் ரூபா 1 4 0

,, சாதாரண கட்டடம் ,, 1 0 0

வி. பி. செலவு வேறு.

மானேஜர்,

கலா நிலயம்,

11, வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

பாலகாண்டம் ...	... ரூ	5	0
அயோத்தியாகாண்டம்	...	5	0
ஆரணியகாண்டம் ...	...	4	0
கிட்கிந்தாகாண்டம்	...	4	8
சுந்தரகாண்டம் ...	...	5	0

இவ்வகை உரைகளுடன் கூடிய

அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலா நிலயம்:—வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

கணித சோதிடம்.

கணித ரீதியாய்ப் பலன் கூறுபவர். ஒருவருஷத்திற்கு மாதவாரியாகவோ அல்லது தசாபுக்தியாகவோ பலன் எழுத ரூ. 2. ஒரு வருஷத்திற்கு ஒன்பது பலனுக எழுத ரூ 10. தினப்பலன் ரூ. 20. ஜாதகமில்லாதவர் பேரையும், கடிதம் எழுதும் நேரத்தையும் அறிவிக்கவும். ஏழு கேள்விக்கு ரூ. 1. பொருத்தம் பார்க்க ரூ 1. ஜாதகம் குறிக்க ரூ. 2. மரணத்தைப்பற்றி வருஷ மாதம் தேதி நாழியுடன் அஷ்டவர்க்க பலன் எழுத ரூ 25. புத்திர சந்தான மில்லாதவருக்குத் தோஷ நிவர்த்தி கூற ரூ 5. அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

‘அப்பாஜி சோதிடரை ஓராண்டாய் அறிவேன். அவரது சோதிடப்புலமையும் பலன்கூறும் திறத்தையும் கண்டுள்ளேன். பலன் சரியே நடந்து வருகின்றது’ என, திரு T. V. கலியாணசுந்தர முதலியார் கூறுகின்றார்.

அப்பாஜி ஜோஸ்யர்,

321, ஐரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

கௌசிக சிரோ கல்பம்.

தைலங்கள் இனித் தேவை யில்லை. வியாபாரிகளுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், வக்கீல்களுக்கும், மாணாக்கர்களுக்கும் மற்றும் மூளைவேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் அவசியம் வேண்டியது. இக்கல்பம்பாலிலாவது ஜலத்திலாவது கொதிக்கவைத்து உபயோகிக்கலாம். மண்டையிடி, ஒற்றைத் தலைவலி, கண்எரிச்சல் மூளைக்கொதிப்பு முதலியவற்றை உடனே போக்கிக் கண்களுக்கு வன்மையையும் பிரகாசத்தையும் கொடுக்கும்.

பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி வேறு.

இதனை விற்க எங்கும் ஏஜண்டுகள் தேவை:—

மானேஜர்:—சேலம் ஸ்டோர்,

சேலம் —SALEM.

வர்த்தமானம்

ஜஸ்டிஸ் கட்சி மகாநாடு

இம்மாதம் 5உ நெல்லூரில் கூடிய ஜஸ்டிஸ் கட்சி II-வது மகாநாட்டின் தலைவர் ராவ்பகதூர் பி. முனுசாமி நாயுடு அவர்கள் செய்த பிரசங்கத்தின் சுருக்கம் பின் வருமாறு:—

“1927-ம் வருஷம், திவான்பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் தலைமையின்கீழ் கோயம்பத்தூரில் கூடிய மகாநாட்டிற்குப் பின் இன்று இங்குக் கூடியிருக்கின்றோம். இதற்கிடையில், நமது தலைவர் பனகால் ராஜாவும், திவான்பகதூர் O. தணிகாசலம் செட்டியார், ராமநாதபுரம் ராஜா, எம். டி. சுப்ரமணிய முதலியார் ஆகியபிரபலஸ்தர்களும் காலமாயினர். இவர்கள் பிராமணரல்லாதார் தொகுதிக்கு அளவுகடந்த நன்மைகள் செய்திருக்கின்றனர். பிராம்மணரைச் சேர்க்கப்படாதென்னும் விதி நமது சங்கத்தில் இருக்கின்றதெனினும், பிராம்மணர்களுக்கு விரோதமாக இந்நலவுரிமைச் சங்கம் ஏற்படவில்லை. பிராமணரல்லாதார்க்கு நன்மைகள் பெருகவேண்டுமென்பதே இதன் நோக்கம். 1916-ம்வருடம் சுயஆட்சி இயக்கம் உண்டானபோது அதிகாரம், அரசாங்கத்தினரிடமிருந்து ஒரு சிறு கோஷ்டியினருடைய கைக்குச் சேரலாகாதென்றும், வகுப்பு வாரியாய்ப் பிராமணரல்லாதார் சட்டசபைக்குத் தம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக் கூடியவர்களா யிருக்கவேண்டுமென்றும் வற்புறுத்த நமதுகட்சி ஏற்பட்டது. ஸர். கே. வி. ரெட்டியார், வகுப்புவாரித் தொகுதியாரால் தமது பிரதிநிதிகளை வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையுடன் அளிக்கப்படும் சீர்திருத்தங்களை யெல்லாம் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருப்பதாகப் பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டி முன் சொல்லியிருக்கின்றார். அந்தக் கமிட்டியின் முன் ஸ்ரீமான் A. இராமசுவாமி முதலியாரவர்கள், வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்தற்காலத்திற்கே ஏற்றதென்று தான் நினைப்பதாகவும், எந்நாளும் அது நிலைத்திருக்கவேண்டுமென்பது அவர் கருத்து அன்று என்றும், பின்னொரு காலத்தில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அவசியமில்லை யென்று சொல்ல நேரலாம் என்றும், கூறினர்.

அரசியல் சீர்திருத்தம் நடைமுதலுக்கு வந்ததிலிருந்து இப்பதின்மூன்று வருடங்களாக இந்தச்சங்கம் அநேக காரியங்களைச் செய்துமுடித் திருக்கிறது. சட்டசபையிலும் சிறந்த பிரதிநிதித்வம் அடைந்திருக்கின்றோம். ஸைமன் கமிட்டியின்முன், பிராமணரல்லாதவர்க்கு ஸ்தானங்கள் ஒதுக்கிவைக்க வேண்டுமென்று கேட்கவில்லை. கவர்ன்மெண்ட் உத்தியோக விஷயத்திலும் நமது நிலைமையைப்பற்றிக் குறைகூற இடமில்லை.

இனி, பிராம்மணரை நாம் சேர்த்துக் கொள்ளாததால் நம்முடைய கட்சி சாதிக்கட்சி எனப்படுவதால், இப்போது அந்த நிபந்தனையை விலக்கிவிட வேண்டுமென்று பிராமணரல்லாதார் பலர் கருதுகின்றனர். தற்கால மந்திரிக் கட்சியாரும் இந்நிபந்தனையை அகற்றிவிட்டால் தாமும் நம்மோடு சேர்ந்து கொள்ள இயலும் என்கின்றனர். நம் கட்சியின் பிரதம அரசியல் நோக்கத்திற்கும் காங்கிரஸின் நோக்கத்திற்கும் அதிக பேதம் இல்லை ஒரு வகுப்பினர் ஒதுக்கப்படுவாராயின் இம்மாகாணத்திலுள்ளவர்களது முழு அபிப்பிராயத்திற்கும் நாம் எப்படி பிரதிநிதித்வம்கொண்டாடக்கூடும்? ஆதலின்பிராமணர்களை நாம் விலக்கிவைத்தல் கூடாது. இதனுல், நோக்கம் ஒன்றுயிருப்பினும், நம்மைவிட்டுப் பிரிந்து விவகரிக்கின்ற பிராமணரல்லாதார் எல்லாரும் ஒன்று சேர்ந்து கொள்ள இயலும். சட்டத்திற்கிணங்கி முன்னேற்றமடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் இம்மாகாணத்தில் முயல்வது நம்முடைய கட்சிதான். விலகியிருக்கின்ற பிராம்மணரல்லாதாரும் நம்மோடு சேர்வதால் நம்கட்சி பலப்படுமேயல்லாது குறைவடையாது.

கட்சியின் தலைமையைப்பற்றிப் பற்பல அபிப்பிராய பேதமிருப்பினும், நம்முடைய நம்பிக்கையைப்பெற்றுள்ள ஒருவரே தலைவராயிருப்பது உத்தமம். நமது கட்சி, கதராடை அபிவிருத்தியிலும் மதுபானம் விலக்குவதிலும் தன் கவனத்தைச்செலுத்தி அவைகளுக்குரிய திட்டங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.”

இம்மகாநாட்டில் தீர்மானமான முக்கியமான விஷயங்கள் இரண்டு. பிராம்மணரை இக்கட்சியில் சேர்த்துக்கொள்வதைப் பற்றியது அவைகளில் ஒன்றும், மகாநாட்டின் விஷயாலோசனைக் கமிட்டியில், பிராம்மணர்களை இக்கட்சியன் சட்டசபைப் பிரிவில் மாத்திரம் ராஜீய வேலையின் பொருட்டுச் சேர்த்துக் கொள்ளலாம் என்ற ஒரு பிரேரபணை கொண்டுவரப்பட்டது. சட்டசபைப் பிரிவிற்கு மாத்திரமே யல்லாமல், தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்திற்கே அதன் கொள்கையை ஏற்றுக்கொள்கின்ற பிராம்மணர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென ஓர் திருத்தம் ஸர். A. P. பாத்ரோ அவர்கள் கொண்டு வந்தார்; அது தோற்றுப்போய்விட்டது. அசல் பிரேரபணையையும் கமிட்டி ஏற்றுக்கொள்ளவில்லை. அதன்பின் மகாநாட்டின் முன்னும் பிராம்மணர்களைக் கட்சியில், சட்டசபை வேலை மட்டுமேனும் சேர்த்துக்கொள்ளலாம் என்ற பிரேரபணையும், ஒரு வோட் வித்தியாசத்தால் தோற்றுப்போய்விட்டது. இதற்குச்சாதகமாக வோட்செய்த ஜில்லாக்கள் 13; அவையாவன;—நெல்லூர், கஞ்சம், தென்னுற்காடு, விசாகப்பட்டணம், கடப்பை, அனந்தபுரம், பல்லாரி, சித்தூர், செங்கற்பட்டு, கிருஷ்ணு, குண்டூர், தென் கன்னடம், கோயம்பத்தூர். இதற்கு எதிராக வோட் செய்த ஜில்லாக்கள், சென்னபட்டணம், மதுரை, கீழ்த்தஞ்சாவூர், ராமநாதபுரம் திருநெல்வேலி, கீழ்க் கோதாவரி, கர்னூல், மலையாளம், சேலம், நீலகிரி, வட ஆற்காடு, திருச்சினுப்பள்ளி, என்பன ஆகும்.

இதன் பின் கட்சித்தலைவர் தேர்ந்தெடுக்கும் விஷயத்தைப்பற்றி ஸர். எ.பி. பாத்ரோ, ஸ்ரீமான் A. இராமசுவாமி முதலியார், டாக்டர் நடேசமுதலியார் முதலான பலர் தத்தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொண்டனர். ஆனுல் R. K. ஷண்முகம் செட்டியார் “மகாநாட்டுத்தலைவரே சங்கத்தலைவராக வருகிற வருஷம் முழுவதும் வேலைசெய்யவேண்டும் என்று கொண்டு வந்ததீர்மானம், கனம் சுப்ராயன் முதலானவர்களால் அமோதிக்கப்பட்டு நிறைவேறியது இதன் படி ஸ்ரீமான், ராவ்பகதூர் பி. முனுசாமிநாயுடு அவர்கள், காங்கிரஸ் தலைவர்களைப்போல் ஒரு வருஷத்திற்குக் கட்சியின் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்பவராவார். இதுபற்றி மகாநாட்டில் மிகுந்த உற்சாகம் உண்டாயிற்று. அவர் தம் முடிவுரையில், “தலைவரைத் தேர்ந்தெடுக்கும் ஆத்திரத்தால் பிராம்மணர்களைச் சேர்த்துக்கொள்ள இம்மகாநாடு மறுத்ததென்றும், அமைதி யேற்பட்டதும் மறுபடி இதனை ஆலோசித்துப் பிராம்மணர்களைச் சேர்த்துக்கொள்ளச் சம்மதம் உண்டாகும் என்று தான் நம்புவதாகவும்,” கூறி மகாநாட்டை முடித்தார்.

அடுத்த மகாநாடு சென்னையிற் கூடலாம் என்று கருதப்படுகின்றது.

தென்னிந்தியா நலவுரிமைச் சங்கநிர்வாக சபைக்கு ஜில்லாவிற்கு இரண்டு பிரதிநிதிகள் வீதமும், சென்னைக்குப் பன்னிருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam MADRAS.

1928-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனுட்சிசுந்தரம் M. A .B. L.—51 கட்டுரைகள்.

2. கம்ப இராமாயணம்

பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்,

3. அகப்பொருள் வரலாறு

காட்சிமுதல், ஓதற்பிரவு வரை—K. இராமரத்னம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.

4. காந்திமதி

காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N. சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.

5. தமிழ்ப்பாடம்

நளவெண்பா,—சயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.

6. மேனுட்டுத் தத்துவ அறிஞர்

பிரிடரிக் நிகேதன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

E. T. *சொக்கம்மான்* B. A; L. T. *எழுதியது* 6 *கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்

9. மேனுட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

கார்லைல், ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.

10. இலக்கியக் கதைகள்

புரந்தனர் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்

11. வானசாஸ்திரம்

இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.

மலர்வனம் பழமுதிர்சோலை

சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.

காலடி நானூற்றின் திறம், சிவகாமி சரித்திர ஆராய்ச்சி, பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.

விலை விபரம—தபால் செலவு உள்பட:—

பையின்டு செய்யாதது	உள்நாடு ரூ 8—0—0	வெளிநாடு ரூ 9—8—0
ஆப்லெதர் கில்டுபயிண்டு	உள்நாடு ரூ 10—0—0	வெளிநாடு ரூ 11—8—0
காலிகோ பயிண்டு	உள்நாடு ரூ 9—8—0	வெளிநாடு ரூ 11—0—0

கலா நிலயம் ஆபீஸ், 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)